# பிரதேச சாகித்திய விழா - 2019
## ප්‍රාදේශීය සාහිත්‍ය උළෙල- 2019

# தரளம்
# மூது



பட்டினமும் சூழலும் பிரதேச கலாசார அதிகார சபை,
பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும்
திருக்கோணமலை

නගර හා කඩවත් ප්‍රාදේශීය සංස්කෘතික බලමණ්ඩලය
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය නගර හා කඩවත්
ත්‍රිකුණාමලය

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரளம்

# முத்து

வெளியீடு

பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும்
திருக்கோணமலை

**ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය නගර හා කඩවත්
ත්‍රිකුණාමලය**

**30.11.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

நூலின் பெயர் : தரளம்

வெளியீடு : பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும், திருக்கோணமலை

உரிமை : பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும், திருக்கோணமலை

முகவரி : பிரதேச செயலகம், பட்டினமும் சூழலும், திருக்கோணமலை

மூன்றாம் வெளியீடு : 30.11.2019

பிரதிகள் : 300

அச்சுப் பதிப்பு : எஸ்.எஸ் டிஜிட்டல்ஸ்,
இல 40, திருஞானசம்மந்தர் வீதி, திருக்கோணமலை.
026-2224933, 0777-695636, 0777- 2426332

ග්‍රන්ථයේ නම : තරලම්

එළිදැක්ම : ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය, නගර හා කඩවත්,ත්‍රිකුණාමලය

අයිතිය : ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය,නගර හා කඩවත්,ත්‍රිකුණාමලය

ලිපිනය : ප්‍රාදේශිය ලේකම් කාර්යාලය,නගර හා කඩවත්,ත්‍රිකුණාමලය

ප්‍රථම මුද්‍රණය : 2019.11.30

මුද්‍රණය : එස්.එස්.ඩිජිටල් ,අංක 40,තිරුඥානසම්බන්දරන් වීදිය,
ත්‍රිකුණාමලය.
026- 2224933, 0777- 695636, 0777-2426332



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினமும் சூழலும் பிரதேச கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் விபரம்

- தலைவர் : திரு ஜே.எஸ் அருள்ராஜ்,
  பிரதேச செயலாளர்,
  பட்டினமும் சூழலும்,
  திருக்கோணமலை.

- உப தலைவர் : கலாபூஷணம் கனக மகேந்திரா

- செயலாளர் : திரு டொ.பிரஷாந்

- உப செயலாளர் : செல்வி தட்சாயினி புவனேந்திரன்

- பொருளாளர் : திரு கோ.மோகனராஜன்

- ஒருங்கிணைப்பாளர் : திருமதி லதா மங்கேஸ்,
  அபிவிருத்தி உத்தியோகத்தர்,
  கலாசார அலுவல்கள் திணைக்களம்,

- நிர்வாக உறுப்பினர்கள்

  - ✓ கலாபூஷணம் சிதம்பரப்பிள்ளை நவரத்தினம் (திருமலை எஸ்.நவம்)
  - ✓ கலாபூஷணம் செல்வராசா விபுணசேகரம்
  - ✓ கலாபூஷணம் தம்பிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
  - ✓ திரு வி.கோணேஸ்வரன்
  - ✓ திருமதி மர்ளியா சக்காப்
  - ✓ திருமதி.கௌ.பாலசாமுண்டீஸ்வரி
  - ✓ திரு க. நேமிநாதன்
  - ✓ திரு அரசரெத்தினம் அச்சுதன்
  - ✓ திரு சிவஞானம் மகேந்திரராஜா
  - ✓ திரு. மனோகரன் விவேக்ஷன்
  - ✓ செல்வி. பரமேஸ்வரி அருணாசலம்
  - ✓ செல்வி. பிரபானந்தன் பிரசாந்தி
  - ✓ செல்வி. ரதினி விக்னேஸ்வரன்

- போஷகர்கள்

  - ✓ ஸ்வாமி ஸ்வஸ்தானந்தாஜி
  - ✓ கலாபூஷணம் சண்முகம் அருளானந்தம்
  - ✓ கலாபூஷணம் தேவிகாராணி முருகுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டலும் ஆலோசனையும்

திரு. ஜே.எஸ் அருள்ராஜ் - பிரதேச செயலாளர்,
பட்டினமும் சூழலும், திருக்கோணமலை

## விழாக்குழு

திருமதி. எச்.ஆர்.எம்.அபேயவரத்ன (உதவி பிரதேச செயலாளர்)

திரு. ம.துஸ்யந்தன் (உதவி பணிப்பாளர் - திட்டமிடல்)

திருமதி.சுபாசினி சண்முகபவன் (கணக்காளர்)

திரு. எஸ்.ஆர்.கே.எஸ் குருகுலசூரிய (நிர்வாக உத்தியோகத்தர்)

திரு. என். நதீஸ்குமார் (மேலதிக மாவட்ட பதிவாளர்)

திருமதி. ஜே. நான்சி ரூபானந்தி (திவிநெகும முகாமையாளர்)

திரு. கே.சிவனேசன் (சமூகசேவை உத்தியோகத்தர்)

திருமதி. கீதாஞ்சலி சுந்தரேஸ்வரன்

திருமதி. மஞ்சுளாதேவி இரவிசங்கர்

திருமதி. கீதாஞ்சலி ஈஸ்வரன்

திரு. ந.சதீசன்

## மலர்க்குழு

கலாபூஷணம் கனக மகேந்திரா

கலாபூஷணம் சி.நவரத்தினம்

கலாபூஷணம் த.சிதம்பரப்பிள்ளை

திருமதி மர்ளியா சக்காப்

திரு சி.மகேந்திரராஜா

திரு டொ.பிரஷாந்

திரு கோ.மோகனராஜன்

திரு வி.கோணேஸ்வரன்

திருமதி எஸ்.ஏஸ். லதாமங்கேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## මග පෙන්වීම හා අනුශාසනය

ජේ.එස්.අරුල්රාජ් මහතා ප්‍රාදේශිය ලේකම්, නගර හා කඩවත්, ත්‍රිකුණාමලය

## උත්සව සංවිධාන කමිටුව

| | | |
|---|---|---|
| එස්.ආර්.එම්.අබේරත්න මහත්මිය | - | (සහකාර ප්‍රාදේශිය ලේකම් ) |
| එම්.දූෂ්‍යාන්තන් මහතා | - | සහකාර අධ්‍යක්ෂ සැලසුම් |
| සුභාෂිනි ෂන්මුගභවන් මහත්මිය | - | ගණකාධිකාරී |
| එස් .ආර්.කේ.එස්.කුරුකුලසූරිය මහතා | - | පරිපාලන නිලධාරි |
| එන්.නදීෂ්කුමාර් මහතා | - | අතිරේක දිස්ත්‍රික් රෙජිස්ට්‍රාර් |
| ජේ.නැන්සි රූබානන්දි මහත්මිය | - | මූලස්ථාන සමෘද්ධි කළමණාකරු |
| කේ.සිවනේෂන් මහතා | - | සමාජ සේවා නිලධාරි |
| එස්.ගීතාංජලි | - | ප්‍රධාන කළමණාකරණ සහකාර |
| මංජුලාදේවි රවිශංකර් මහත්මිය | | |
| එන්.සදිසන් මහතා | | |

## සංස්කාරක මණ්ඩලය

කලාභූෂණ කනක මහේන්ද්‍රන් මහතා

කලාභූෂණ එස්.නවරත්නම් මහතා

මර්ලියා සක්කාෆ් මහත්මිය

ඩී.ප්‍රසාන්ත් මහතා

කේ.මෝහණරාජන් මහතා

වි.කොනේෂ්වරන් මහතා

එස්.එස්. ලතාමංගේෂ් මහත්මිය



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


01. வெளியீட்டுரை – பிரதேச செயலாளர் பட்டினமும் சூழலும், திருகோணமலை.

02. வாழ்த்துச் செய்திகள்

02.1. அரசாங்க அதிபர் – திருகோணமலை மாவட்ட செயலகம்.

02.2. பணிப்பாளர் – பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

02.3. பணிப்பாளர் – கலாசார அலுவல்கள் திணைக்களம்.

03. ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் இலக்கியமும் கலையும்

04. පළතුරු සොයා කන්දට ගිය පැටී සහ යාළුවෝ

05. அப்பா என்ன விலை..?

06. නොමිනිසුන් අභිමුවේ වියරු වූ මිහිමව් සෙනෙහේ

07. கலை இலக்கியம் உருவாக்கும் மனிதம்

08. විභාගය ලියන අම්මලා

09. மானிடனும் இலக்கியமும் கலையும்

10. සාහිත්‍ය තේමා ගීතය

11. பாடலாக்கம் "மீண்டும் நீயே என் தாயாய்......"

12. නොදුටු ස්නේහය

13. අකීකරුකමට දඬුවමක්

14. ஒன்றுபட்டால் - சிறுவர்கதை

15. போற்றுவோம்! நினைவு கூருவோம்!

அமரர் அருளானந்தம் அருள்பாஸ்கரன்

16. අලුත් මහත්තයා

17. ඉන්දිය සයුරේ මුතු ඇටය බැඳි ජීවමාන සාහිත්‍ය හා කලාව

18. கவிதை இலக்கியம் - சி.மகேந்திரராஜா

19. The Arts: Gateway of our life

20. Mother's Love




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை பிரதேச செயலாளர் அவர்களது வெளியீட்டுரை



மூச்சைத் திணறடிக்கும் போட்டி நிறைந்த இவ் இயந்திரச் சூழலில் மக்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு விழுமியங்களை இளந்தலைமுறையினருக்கு வெளிப்படுத்துவதும், அவற்றைப் பாதுகாப்பதும், ஒவ்வொருவரினதும் சமூகப் பொறுப்பாகும் என்பதை உணர்ந்து எமது பிரதேச கலாசார அதிகார சபையினால் வெளியிடப்படும் "தரளம்" சிறப்புமலர் இவ்வருடமும் பல்வேறு அம்சங்களைத் தாங்கி வருகின்றது. இச் சிறப்புமலர் அதிகார சபை உறுப்பினர்களினதும், கலாசார உத்தியோகத்தர்களினதும், மாணவர்களினதும் அயராத குழுமுயற்சியினால் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நவீனயுகமும் நாகரீகமோகமும் கொண்ட இவ் யுகத்தில் இளம்தலைமுறையினரை சீரழிக்கக் கூடிய பல அநாமோதய செயற்பாடுகள் அதிகரித்துச் செல்லும் இச்சூழலில், சிறார்களையும் இளைஞர்களையும் சிறந்த ஒழுக்க விழுமியமும் ஆளுமையும் கொண்டவர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய தார்மீக கடமை அனைவருக்கும் உள்ளது. இதன் வழியில் எமது பிரதேச பாட-சாலை மாணவர்களிடம் மறைந்து கிடந்த கலை இலக்கிய மற்றும் பண்பாட்டு விழுமியங்கள் சார்ந்த விடயங்களை பொதுத் தளத்தின் ஊடாக வெளிக்கொணர்ந்த எமது பிரதேச கலாசார அதிகார சபையினரால் அவற்றுள் மிகச்சிறந்த ஆக்கங்களை உள்ளடக்கியதாக இச் சிறப்புமலர் வெளிடப்படுகின்றது.

கலை இலக்கிய மற்றும் பண்பாடுசார் விடயங்களில் தம்மை அர்பணித்து பிரதேசத்திற்கு மகுடம் சூட்டி கௌரவம் பெற்ற கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஏனைய படைப்பாளிகளினது விபரங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளமை மற்றுமொரு சிறப்பாகும். இப் பணியில் ஆக்கங்களை வழங்கியவர்களுக்கு நன்றி பாராட்டுவதுடன் கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நன்கொடையாளர்கள் பதிப்பகத்தினர் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றியினையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜே.எஸ்.அருள்ராஜ்,**
**பிரதேச செயலாளரும், பிரதேச கலாசார அதிகார சபை தலைவரும்,**
**பிரதேச செயலகம், பட்டணமும் சூழலும்,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்ட செயலாளர் அவர்களது வாழ்த்துச் செய்தி



திருகோணமலை பட்டனமும் சூழலும் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற பிரதேச சாகித்திய விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் "தரளம்" என்னும் சிறப்பு மலர் மூன்றாவது தடவையாக வெளியிடப்படுவதை முன்னிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணடலை பட்டனமும் சூழலும் பிரதேசமானது பல்லின மக்களும் வாழ்கின்ற ஒரு பிரதேசமாகும். இப் பிரதேசம் சிறந்த இயற்கை சூழலையும் பௌதீக வளங்களையும் கொண்டமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும். இங்கு பல ஆளுமைமிக்க கலைஞர்கள் இலக்கிய கர்த்தாக்கள் என்போர் பல ஆற்றுகைகளையும் படைப்புக்களையும் வெளியிட்டுவருவது நாமறிந்த விடயமாகும். கலை இலக்கியத்தை அழிவடையாமல் பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வது இன்றைய சமூகத்தவர்களினது கடமையாகும். இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வருடமும் பிரதேச சாகித்திய விழா பிரதேச கலாச்சார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் இம் மலரானது பாடசாலை மாணவர்களதும், படைப்பாளிகளினதும் ஆக்கங்களைத் தாங்கி வருவது மாணவர்களினதும் ஏனைய கலைஞர்களினதும் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும்.

எனவே இவ் விழாமலர் சிறப்புடன் வெளிவரவும்இ விழா சிறப்புற நடைபெறவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**என்.ஏ.ஏ.புஸ்பகுமார,**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,**
**மாவட்ட செயலகம்,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி.



வரலாற்று பெருமைமிக்க திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படவிருக்கும் கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் ''தரளம்'' எனும் சிறப்புமலருக்கு வாழ்த்தினை வழங்குவதில் மட்டற்றமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தற்கால சமூகச்சூழலில் கலை கலாசாரம், பண்பாடு என்பன மிகவும் பின்தங்கியநிலைக்கு தள்ளப்பட்டுவருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். ஊடகங்கள், நவீனகையடக்கத் தொலைபேசிகள், போதைவஸ்து, என்பன இன்றைய இளம் தலைமுறையினரை பெரிதும் கவர்ந்து செல்வதால் காலாகாலமாக எமது மூதாதையர் பின்பற்றிவந்த கலை, கலாசாா, பண்பாட்டு பாரம்பரியங்கள் என்பன இன்றையநிலையில் நலிவடைந்து வருவது மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயமாகும். இவற்றைநாம் அபிவிருத்திப்பாதைக்கு இட்டுச்செல்வது மட்டுமன்ற வருங்கால தலைமுறையினருக்கு கையளிப்பது எமது தலையாய கடமையாகும். இவற்றைக் கருத்ததில்கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் கலாச்சார விழாக்களை முன்னெடுத்துவருவது வரவேற்கத்தக்க தொருவிடயமாகும். இவ் விழாவைமுன்னிட்டு வெளியிடப்படவுள்ள சிறப்புமலர் காலத்தால் நிலைத்துநிற்கும் நல்ல பலவிடயங்களை தாங்கிவந்து எதிர்கால சந்ததியினருக்கு சிறந்ததொரு வழிகாட்டியாக அமையவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

திருகோணமலை பட்டணமும்சூழலும் பிரதேச செயலகத்தில் பற்பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இவ்விழாவை முன்னின்று செயற்படுத்தும் பிரதேச செயலாளருக்கும், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு.ச.நவநீதன்,
மாகாணப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அலுவல்கள் பணிப்பாளரின் செய்தி



உணர்ச்சிபூர்வமான உள்ளம் படைத்த மானிட சமூகத்தை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதே கலையின் நோக்கமாகும். அந்த வகையில் மனக்கிளர்ச்சியினை கட்டுப்படுத்திய மென்மையான உணர்வுமிக்கதோர் சமூகத்தை உருவாக்குவதில் கலையின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

புராதன பண்டிதர்கள் உலகை ஒரே கலைக் கூடமாக நோக்கினர். அவர்கள் அவற்றை உலகலாவிய கலை, சிற்பம், நன்நெறி, கலையும் விஞ்ஞானமும் என வகைப்படுத்தினர். அவ் அழகியற்கலை கவின்கலை என்பன கலை இலக்கிய நூல் வடிவங்களாக தொழில்நுட்ப கலாசாரமொன்றை நோக்கி முன்னேறியுள்ளன. அவ்வாறானதொரு பின்னணியில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகமும், கலாசார அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்கின்ற பிரதேச இலக்கிய விழாவில் "தரளம்" என்னும் நூலை வெளியிடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்சியினை அடைகின்றேன்.

இலங்கைக் கலைத்துறையில் கலைஞர்களை உற்சாகப்படுத்தல் தேசிய அளவிலான வளர்சியின் பரந்த விளம்பரம் மற்றும் பொதுமக்களின் பரந்த மனப்பான்மை என்பவற்றை நனவாக்கும் பிரதேச இலக்கிய விழாக்கள் சிறந்ததொரு தெளிவான அனுபவமாகும். கலைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் இலக்கியம் படைத்தல் ஆகியவற்றை மூத்த கலைஞர்களிடையே மெருகேற்றுவதே கலாசார அதிகார சபை பாரிய பங்களிப்பு செய்கின்றன என்றால் அது மிகையாகாது. பிரதேச கலாசார விழாக்களை ஏற்பாடு செய்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பரிதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக சிறப்புமலர் ஒன்றை வெளியிட திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகமும், கலாசார அதிகாரசபையும் எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்துப் படைபாளர்கள் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

அனுஷா கோகுல பர்ணாந்து,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் இலக்கியமும் கலையும்

பண்டைய காலந்தொட்டு இன்றுவரை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இலக்கியமும் கலையும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது. அவர்கள் தத்தமது திறமைகளை வெளிப்படுத்தும் ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடவும் இவ் இலக்கியம், கலை என்பன பெரும் பங்கு ஆற்றுகின்றது என்பதில் ஐயமில்லை.

மனிதனது ஒவ்வொரு நடவடிக்கைகளும் கலை வடிவமாகவே காணப்படுகின்றது. இதனாலேயே புலவர்கள் பலர் மக்கள் வாழ்வியலை பயன்படுத்தி இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இதற்கு சான்றாக சங்க காலத்தில் எழுந்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களைக் குறிப்பிடலாம். இச் சங்க கால நூல்கள் அகப்புற பொருள் மரபுகளை முன் வைத்துள்ளது. அகம் என்பது காதல் சார்ந்த ஒழுக்கத்தையும் புறம் என்பது காதல் சாராத ஒழுக்கத்தையும் குறிப்பிடுகின்றது. இவ்வாறான இலக்கியச் சிறப்புள்ள நூல்களைக் கற்பதனால் மனிதனானவன் அன்பு, வீரம் என்பவற்றை நன்கு உணர்ந்து கொள்கிறான்.

இதே போன்று சங்க மருவிய காலத்திலும் அகத்திணை, புறத்திணை போன்ற நூல்கள் தோற்றம் பெற்றன. அது மட்டுமன்றி பல்லவர் காலத்தில் பக்திசார் இலக்கியங்களும், உலகியல்சார் இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. சோழர் காலமும் விஜயநகர நாயக்கர் காலமும் இலக்கியம் தோற்றம் பெற்றதற்கு குறிப்பிடத்தக்க காலங்களாகும். நவீன இலக்கியத்தின் மிக முனைப்பான அம்சங்களில் ஒன்று புதுமையை – மாற்றத்தை – பிரக்ஞை – பூர்வாக மேற்கொள்வதாகும். சபாபதி நாவலரது கூற்றிலே 'முறை பிறழாமை' என்ற கருத்து வற்புறுத்தப்பட்டதைக் கண்டோமல்லவா? 'முன்னோர் மொழியை பொன்னைப் போல போற்றுவதே' முறை பிறழாமையின் முக்கிய வெளிப்பாடாகும். இதற்கு மாறானது நவீன காலத்தில் எழுந்த ஆற்றல் மிக்க இலக்கியங்கள் எனலாம்.

நாடகம், நாவல், தன் உணர்ச்சிப் பாடல் முதலிய நவீன இலக்கியங்களைத் தமிழில் தொடக்கி வைத்த முதல் முயற்சியாளர்கள் அனைவரும் தாம் புகுவது புனைவதில் ஈடுபட்டிருந்தமையை நன்கு உணர்ந்திருந்தனர். இவ்வுணர்வு தற்கால தமிழிலக்கிய அடிப்படையில் மிக முக்கியமானது. நவீன காலத்திற்குரிய சிறப்பியல்பு இலக்கியத்திலும் தவிர்க்க இயலாத உணர்வாக இது காணப்படுகின்றது. உதாரணமாக இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்திலே மெல்ல மெல்ல பொதுவுடைமைச் சிந்தனைகளும் இயக்கங்களும் பரவியதைத் தொடர்ந்து இலக்கியத்தில் அவற்றின் தாக்கமும் விளைவும் அதிகரித்து வந்துள்ளன. இதனால் இக்கால இலக்கியங்கள் பலவற்றில் மார்க்சியத் தத்துவமும் அக் கொள்கை பரம்பலும் குறிப்பிடத்தக்கனவாய் இருக்கின்றன. நவீன இலக்கியங்கள் இந்நிலையையும் பிரதி பலிக்கின்றன.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் தொடங்கி இன்றுவரை விகற்பங்களுடனும் வண்ண வேறுபாடுகளுடன் இலக்கியத்தில் உரு வரையறை செய்யும் கலைகள் பற்றிய கருத்துக்களை அறிஞர்கள் பலரும் வெளியிட்டுள்ளனர்.

வோட்ஸ்ருவோட் என்பவர் 'மனிதன் ஒருவன் மனிதனுடன் சாதாரண மொழியில் பேசுவதே கலை என கூறுகிறார். இதன் அடிப்படையில் மனிதனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் கலை காணப்படுகிறது. ஹானிக்மன் கலை என்பது 'மனித உயர்ச்சியால் உருவாக்கப்படுகின்ற அழகியல் அம்சத்தை தன் உள்ளே கொண்டதான உணர்வினை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகின்ற படைப்புக்கள் கலையாகும்' என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்கள் என்பவை மக்கள் வாழ்வை செம்மைப்படுத்தவே எழுந்தவை. 'இலக்கியம்' என்ற சொல் இலக்கைக் காட்டுவது அதாவது மக்களின் இலக்கி எத்திசையில் போக வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது. இலக்கியங்கள் நிலைத்து நிற்பவை: மக்களால் படிக்கப்படுகின்றவை: பாராட்டப்படுகின்றவை: இலக்கிய வழக்கு அப்படியே மாறாமல் இருக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இலக்கியங்கள் எந்த முறையில் இருந்தனவோ அந்த முறையிலேயே இன்றும் இலக்கியங்கள் தோன்ற வேண்டும் என்று கூறுவோர் உண்டு. இவர்கள் இலக்கியத்தின் இயல்பை அறியாதவர்கள். மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்தவாறு தற்போது இல்லை. உருவாக்கத்தில் அப்படியே இருக்கலாம் ஆனால் குணத்தில், செய்கையில், பழக்க வழக்கங்களில் பல வகையான மாறுதல்களை அடைகின்றனர். அரசியலில், சமுதாய அமைப்பில் மாற்றமடைந்து வருகின்றன. இவை மனித சமுதாய வளர்ச்சியாகும். இவ்வாறு மனித முன்னேற்றத்திற்கு தகுந்தவாறு அவர்களோடு இணைந்து வருவதே இலக்கிய வளர்ச்சியாகும்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஒரு சிறந்த இலக்கியத்தை இயற்றியவர் கம்பன். இன்று சிலர் தூற்றினாலும் பலர் அவன் இலக்கியத்தை போற்றுகின்றனர். கம்பனுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னிருந்த புலவர்கள் கல்வியினால் சாதி பேதத்தை ஒழிக்கலாம் என்று நம்பினர். கம்பன் 'அது மட்டும் போதாது அதனால் மட்டும் சாதி பேதம் ஒழியாது மக்கள் வாழ்க்கைக்கு தேவையான எல்லாப் பொருட்களும் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் அப்பொழுது தான் மக்கள் சமுதாயம் மகிழ்ச்சியாக வாழ முடியும்' என்ற உண்மையை

'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற

கல்லாகும் இல்லை அவை வல்லவர் அல்லாரும் இல்லை...'

என்ற பாடலில் எழுதி வைத்தார். இது போன்ற பல உயர்ந்த எண்ணங்களை கம்பனது இலக்கியப் படைப்புக்களில் காணலாம்.

சங்க இலக்கியங்களிலே புறநானூற்றை எடுத்து நோக்குவோமானால் அது ஒரு தனிப் பாடல்களின் திரட்டு தான்: பழந்தமிழ் புலவர்களின் தொகுதி அது. அப் பாடல்களிலே அரசியல் முறைகளையும், நீதி முறைகளையும் காணலாம். மக்கள் வாழ வழிகாட்டும் அறிவுரைகளையும் காணலாம். உலக நிலையைத் தொட்டுக் காட்டி உண்மையான வழி இது தான் என்று கூறும். வேதாந்த கருத்து மூலம் மக்கள் சமுதாயம் ஒன்றுபட்டு இன்பமாக வாழ்வதற்கு வழி கூறும் பாடல்களைக் காணலாம்.

இவ்வாறு திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களிலே பல அறக் கருத்துக்களை காணக் கூடியதாக உள்ளது. எமது முன்னோர்கள் பெரும்பாலும் இலக்கியங்களைப் பாட்டுக்களாக எழுதி வந்தமைக்கு ஒரு காரணம் 'மக்கள் மனதைக் கவரும் வாசகங்களிலே இலக்கியங்கள் அமைய வேண்டும்' என்பது ஆகும். இவ்வாறான இனிமையான பாடல் வரி மூலம் கற்பதனால் மனிதன் இலகுவில் கற்று தெளிவடைகின்றான்.

பழங்காலந் தொட்டு மனிதர்கள் இலக்கிய அடிப்படையில் வளர்ச்சியடைந்து காணப்பட்டு உள்ளனர். அதனால் நவீன இலக்கியங்களின் பிரதான எடுகோள் ஒன்று காலத்துவம் பற்றியது. பௌதீக உலகின் மிக முக்கிய பரிமானங்களில் ஒன்றாக மட்டுமன்றி, தனிமனிதனது சமூகத்திலும் வரலாற்றை நிர்ணயிக்கும் ஒரு சக்தியாக காலம் அமைந்திருக்கின்றது என்பதே அத்தத்துவமாகும். வேறு மொழியில் தோன்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களான கிரேக்க, உரோம இலக்கியங்களிலே தத்துவங்கள் காலங் கடந்தவை என்ற எண்ணமே வேரூன்றி காணப்படுகின்றது.

புராதன இந்திய இலக்கியங்களையும், வேதங்களையும் மனதாரப் போற்றிய மகாகவி பாரதியார் கூட இவ் விடயத்தை நவீனத்துவம் மிக்க நன் குணத்தவராய் பாடுகின்றார்.

'பின்னும் ஸ்மிருதிகள் செய்தார் - அவை

பேணும் மனிதர் உலகினில் இல்லை......'

காலத் தத்துவத்தை கவிஞர் அதற்கு மேல் தெளிவாகக் கூறியிருக்க முடியாது. அது மட்டுமன்றி பண்பு வேறுபாடுகளும் 'நவீன காலம்' என்ற சொற்றொடரில் அமைந்திருப்பதைக் குறிக்கின்றன. உதாரணமாக இருபதாம் நூற்றாண்டு தமிழிலக்கியம், தற்கால தமிழிலக்கியம், புதுமை தமிழிலக்கியம் என்பவற்றில் இவற்றைக் காணலாம்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டங்களிலும் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவை படிப்போர் மனதில் திருப்பு முனையை ஏற்படுத்தி ஆக்க பூர்வமான மனிதர்களை உருவாக்கின்றன. இம் மனிதர்களில் பல படைப்பாளர்கள், சிந்தனையாளர்கள் உருவாகியுள்ளனர் என்பது வெளிப்படையானது. ஆகவே இவை ஆக்க பூர்வமான மனிதர்களை உருவாக்குவது வெளிப்படை உண்மையாகும்.

கலையை எடுத்துக் கொண்டால் ஆய கலைகள் அறுபத்து நான்கு. இவற்றால் மனிதன் மட்டற்ற பயனை அடைகின்றான். அதாவது உடல், உள விருத்தி ஏற்படுகின்றது. அவனது மனம் ஒருநிலைப்படுகிறது. சிந்தனைகள், கற்பனையாற்றல், படைப்பாற்றல் விரிவடைகின்றது. கட்புலனுக்கு இன்பமளிக்கக்கூடிய சிற்பம், ஓவியம், சினிமா போன்றவையும் செவிப்புலனுக்கு இன்பமளிக்கக்கூடிய நாடகம், நடனம் போன்ற பல கலைகளும் மனிதனுக்கு தொழில்களையும், ஆற்றல்களையும் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமல்லாது இன்பத்தையும் வழங்குகின்றது.

கலையானது மனிதனைப் பல்வேறுபட்ட முறைகளில் சிந்திக்க வைக்கின்றது. அவனை பூரணத்துவம் அடைய வைக்கின்றது. இக் கலையானது மனித மனங்களை ஆற்றுப்படுத்தி வாழ்க்கையின் இன்பங்களை உய்த்துணரச் செய்கின்றது. உருவம், உள்ளடக்கம், சமூகப்பணி கொண்டது கலையாகும். இவ் உருவ உள்ளடக்கத்தினால் தான் கலை இன்னும் மனித உணர்வுகளை கட்டி எழுப்பி வாழ்ந்து கொண்டு இருக்கின்றது. உதாரணமாக ஒரு மரத்தில் பூ, பழம் இயற்கையாகவே உள்ளது. இவற்றினை களி மண்ணினால் நாம் உருவாக்க முற்படும் போது அது கலைப் பொருளாகின்றது. ஆகவே கலையானது உணர்வு, உருவம் மூலம் புதிய புதிய தத்துருபங்களை எடுத்து மனித வாழ்வை அழகாக்கின்றது. இதனால் கலையானது உலகில் மொழி, மதம், இனம் என்பவற்றைக் கடந்து ஆக்க பூர்வமான பல மனிதர்களை உருவாக்கி இருக்கின்றது.

பல்வேறு இலக்கியங்களையும் கலைகளையும் எழுதிப் புகழ் பெற்ற இலக்கிய வாதிகளும் கவிஞர்களும் உலகம் போற்றுபவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களே இலக்கியம் கலைகளின் அவசியத்திற்கு சான்று பகர்கின்றனர். இவற்றின் மூலம் சிந்தனையை விருத்தி செய்வதும் அவை சீர் கெடாமல் பாதுகாப்பதும் எமது கடமையாகும். இலக்கியம், கலை ஆகியன உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து அழியாப் பயன்தரும். அதுவே ஆக்க பூர்வமான மனிதனை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

**ஆக்கம்**
**விதுஷாலினி வரதராஜன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ගම්පොළ වඩුගේ ඉනෝකා ලසන්ති ෆොන්සේකා

## අවු 18ට වැඩි - ළමා කතන්දර
## "පළතුරු සොයා කන්දට ගිය පැටී සහ යාළුවෝ"

පුංචි අලි පැටියා හෙමින් හෙමින් අලි සභාවට ගියා. එතන අලි රැලේ හැමෝම වගේ හිටියා. ඒත් එයාගේ අම්මා පේන්න හිටියේ නෑ. එයාගේ ඇස් දෙකට කඳුළු ආවා. අලි පැටියත් එක්ක පළතුරු හොයන්න එහා කන්දට ගිය යාළුවෝ ටිකත් බයවෙලා වගේ ඈතට වෙලා බලන් හිටියා. අලි රැලේ වැරදි කරන අයගෙන් ප්‍රශ්න කරන්න එක්ක එන්නේ මේ අලි සභාවට තමයි. අලි පැංචගේ ළඟට ආපු අලි නැන්දා හරි ආදරයෙන් අලි පැංචගේ ඔළුව අත ගෑවා. නඩු අහන තැනක් වුනත් එයා පුංචි පැටියෙක්නේ, ඉතින්...... පුංචි ඔයාලට හැමෝම ආදරේ කරනවා වගේම මේ පුංචි අලි පැංචටත් අලි රැලේ හැමෝම ආදරෙයි.

ඔන්න ඉතින් අලි නැන්දා පුංචි අලි පැටියගෙන් ප්‍රශ්න කරන්න පටන් ගත්තා.

"පැටී ........ මොකද වුනේ කියලා කියන්න. පුංචි ඔයා යාළුවොත් එක්ක එහා කන්දට ගියේ මොකටද? අලි නැන්දා පුංචි පැටීගේ හිත නොරිදෙන විදියට හිස අතගාමින් ඇසුවා"

"අ ..........පි............. අපි පළතුරු හොයන්නයි එහා කන්දට ගියේ." පුංචි පැටී බයෙන් බයෙන් වගේ ගොත ගසමින් කීවා.

"ඔය ළමයි කාට කියල ද එහා කන්දට ගියේ?" අලි සීයා ගාම්භීර හඬින් ඇසුවා.

මෙතෙක් වෙලා පැත්තකට වෙලා හිටපු පැටීගේ අලි යාළුවෝ ටික මේ වෙලාවේ එයාව තනි කළේ නෑ. එයාලත් පැටීගේ ළඟට ආවා. එහෙම තමයි නේද? හොඳ යාළුවෝ. දුකේදි වගේම සැපේදිත් එකට ඉන්නවා. ඔයාලටත් ඒ වගේ යාළුවෝ ඉන්නව ද? එහෙනම් සතුටු වෙන්න එයාලා තමයි නියම යාළුවෝ. එයාලා එක්ක හැමදාම සතුටින් සමගියෙන් ඉන්න ඕන.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"බලන්න පුංචි ඔයාට මොකක් හරි කරදරයක් වුනා නම් එහෙම. තව පොඩ්ඩෙන් අර නපුරු දඩයක්කාරයා ඔයාව අරන් යනවා" අලි මාමා කෙනෙකුත් දැනමුතුකම් දුන්නා.

"හා කියන්නකෝ බලන්න දැන් වෙච්ච දේවල්" අලි නැන්දා කටහඬ අවදි කලා.

මෙතෙක් වෙලා වැඩිහිටි හැමෝගෙම කථා අහන් හිටපු පැටීගේ යාළුවෙක් කථාව කියන්න පටන් ගත්තා.

"පැටී ටික දවසක ඉඳලා හරි දුකෙන් කල්පනා කර කර හිටියා. සමහර වෙලාවට එයාගේ ඇස්වල කඳුලුත් තියෙනවා දැක්කා. ඉතිං.......... ඉතිං, අපි එයාගෙන් ඇහුවා ඇයි එහෙම ඉන්නේ කියලා. එතකොට එයා කිව්වා එයාගේ අම්මගේ කකුළේ කට්ටක් ඇනිලා ඇවිදින්න අමාරු නිසා, අම්මට කෑම හොයාගෙන එන්න බැරිවුණා කියලා. ඒ නිසා අම්මා දුකින් ඉන්නවා බලන් ඉන්න එයාට බෑ කිව්වා. ඉතින් අපි එයාගේ යාළුවොනේ එයා දුකින් කරදරෙන් ඉන්නකොට අපි එකතුවෙලා එයාට උදව් කරන්න හිතුවා. ඊට පස්සේ අපි කථාවෙලා තීරණය කරා එහා කන්දට ගිහින් පළතුරු හොයා ගෙන එන්න" කියලා පැටීගේ යාළුවා කියාගෙන කියාගෙන ගියා.

"අනේ දරුවනේ...... එහා කන්දට යන්න තරම් ඔයාලා තාම ලොකු වෙලා නෑ. අපිට කිව්වා නම් අපි උදව් කරනවනේ........" අලි නැන්දා නැවතත් කිව්වා .

"හරි...... ඉතින්........ කියමුකෝ බලන්න එහේ ගිහින් මොනවද කළේ කියලා." අලි සීයා යළි විමසා සිටියා.

අලි පැංචා ඒ කියන්නේ "පැටී" යාළුවොත් එක්ක එහා කන්දට පළතුරු හොයන්න ගිය අපුරු කථාව එකින් එකට විස්තර කරලා කියන්න පටන් ගත්තා.

"අපි හීං ඔය පහු කරලා අන්දර කැලය මැදින් ටික දුරක් යද්දි කුරුළු රංචුවක් මුණ ගැහුණා. එයාලාගෙන් අපි ඇහුවා පළතුරු තියෙන ඉසව්ව කොහේද කියලා. එයාලා කිව්වා කුඹුක් ගස් ටික පහු කරලා යද්දි බක්මී මල් බිමට වැටිලා කහපාට රෙද්දක් එලුවා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

වගේ ජේන තැනක් තියෙනවා. ඒ තැන පහු කලාම තියෙන පළතුරු යාය ඔයාලට පෙනෙයි කියලා."

අපි කට්ටිය එකතුවෙලා එතනට යද්දි නුග වැලකුත් අරන් ගියා. මමයි බණ්ඩියයි ඒ වැලට පළතුරු එල්ලුවා ගේන්න පහසු වෙන්න, "පුළුවන් විදියට සකස් කර ගත්තා." දගයයි චූටියි කූඩ දෙකකට පුරවගෙන පැත්තක තියලා බඩ පිරෙනකල් අපි පළතුරු ජාති කෑවා. ඊට පස්සේ අපි චුට්ටක් සෙල්ලම් කරා. කොමලි නම් පැත්තකට වෙලා හිටියා. එයා කැලේ පිපිලා තිබ්බ මල් කඩ කඩා හිටියා මිසක් පළතුරු කඩන්නවත් එකතු කරන්නවත් උදව් කලේ නෑ. පැටී අමනාපෙන් මෙන් කීවා.

"සීයේ...... මෙයාලා මට පළතුරු කඩන්න දුන්නේ නෑ. මම කෙල්ලෙක් කියලා ලැජ්ජා කළා. කොල්ලන්ගේ වැඩ මේවා කියලා කියපු නිසා, මං ඉතින් ........ පැත්තකට වෙලා මල් ටිකක් කඩලා එකතු කර ගත්තා. කන්දෙ විහාරෙට අරන් යන්නයි මාල ගොතන්නයි" කොමලි කීවා.

පැටී කියාගෙන ආපු කථාවේ ඉතිරි ටික කිව්වේ චූටී. පළතුරුත් අරන් අපි ආපහු කැලේ මැදින් එද්දි පැටීව උගුලකට අහු වුණා. ඉතින් අපි ටිකක් බයවුණා. කොයි වෙලේ දඩයක්කාරයා එයි ද කියලා අපි ටිකක් කලබල වුණා." මමයි බණ්ඩියයි පැටී ළඟටම වෙලා හිටියා." දගයයි කොමලියි ඔයාලගේ උදව් අරන් එන්න කියලා එව්වා." ඉතින් ඔයාලා ඇවිත් පැටීවත් බේරගෙන අමාරුවෙන් අපි එකතු කරගත්ත පළතුරු ටිකත් ගමට අරන් එන්න උදව් කලා." ඔයාලාට ස්තුතියි" චූටි කතාව අවසන් කලා, මෙතෙක් වෙලා නොපෙනී හිටපු පැටීගේ අම්මා මල් මාලයක් අරගෙන එතනට ආවා." අම්මගේ ඇස් දෙකේ කඳුළු තිබුණා." ඒ සතුට චූටී පැටී අම්මා ළඟට දුවගෙන ගිහින් තුරුළු වුණා."

චූටියි, කොමලියි, දගයයි, බණ්ඩියයි හරි සතුටින් පැටී දිහා බලන් හිටියා." අඩ අඩා හිටපු එයාගේ යාළුවා අද කොච්චර සතුටක් ලබනවද කියලා එයාලා හිතුවා." ඒ විතරක් නෙමේ පැටීගේ අම්මගේ කකුළේ තුවාලෙත් ඒ වෙනකොට සනීප වෙලා තිබුණා." අලි රැලේ හැමෝම මේ අම්මගෙයි පුතාගෙයි ආදරේ දිහා හරි ආශාවෙන් බලන් හිටියා."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"මං ආදරෙයි මගේ පැටියෝ." අලි අම්මා පැටිව ආදරයෙන් සිප වැළඳ ගත්තා.

ඉතින් අන්තිමේදි අලි ගම්මානේ හැමෝම මේ පුංචි අලි පැටවුන්ගේ වීර ක්‍රියාවට ප්‍රශංසා කළා." පුංචි උනත් වැඩිහිටියන්ට උදව්වෙන්න තරම් දක්ෂ වීම පිළිබඳව එයාලට ස්තුති කලා." සේරමලා එහා කන්දෙන් අරන් ආපු පළතුරු බෙදා හදාගෙන සතුටින් රස කර කෑවා."

දැක්කා නේද යාළුවනේ, පැටි පුංචි අලි පැටියෙක් වුණාට එයා එයාගේ අම්මා අසනීප වුණු වෙලාවේ එයාගේ යාළුවොත් හවුල් කරගෙන අම්මට උදව් කරන්න ඉදිරිපත් වුන හැටි. පුංචි වුනත් හිතුවොත් කරන්න බැරි දෙයක් නෑ දරුවනේ ඔයාලටත්. උත්සාහය විතරයි ඕන.

…………………… නිමි ……………………



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா என்ன விலை..?

"ஓம் சிவாய நமக.. ஓம் சிவசங்கராய நமக..."

சிவாச்சாரியாரின் வேதங்கள் செவியேற, குளிரேறிய மெல்லிய இளந்தென்றல் வீச, அடிவானில் கடலேறி, கல்லாலின் வழியே ஊடறுக்கும் காலைக்கதிர்கள் பரவ கோணேச்சரப் பெருமானின் தீபாராதனையை வணங்கி நிற்பது ஓர் தனிச்சுகம் தான். அன்று ஞாயிற்றுக்கிழமை சிவகாமி, மகள் கோதையுடன் கோணேச்சரத்தில் காலைப் பூசைக்காக வந்திருந்தாள். பூசை முடிந்ததும் கோயிலின் முன்னால் படர்ந்திருக்கும் அந்தக் கருங்கல் பாறையில் சில நிமிடங்கள் அமர்ந்திருப்பதுதான் அவள் வழமை. அன்று சற்று சோர்வுடன் மனதில் ஏதோ இறுக்கமுள்ளவளாக கண்ணில் நீர் ததும்ப, பலநூற்றுக்கணக்கில் தொங்கும் நேர்த்திக்கடன் தொட்டில்களுடன் ஒரு தொட்டிலாய் அந்த ஆலங்கிளையில் தன் எண்ணங்களை தொங்கவிட்டுக் கொண்டிருந்தாள் சிவகாமி. அந்த ஆலங்கிளை அவள் வாழ்வில் இரண்டு புதிய அத்தியாயங்களைத் திறந்திருந்தது.

சிவகாமி தம்பலகாமத்தைச் சேர்ந்த ஓர் அழகான கிராமிய மணங்கமழும் பிள்ளை. அம்மா நளாயினி, அப்பா வேலாயுதம், தம்பிமார் இருவர், சின்னம்மாவின் குடும்பம் அப்புச்சி அம்மாச்சி என கூட்டுக் குடும்பமாக, வயலும் வாழ்வுமாக குதூகலம் நிரம்ப வாழ்ந்தவள். சிறுவயதில் வாய்க்கால் வயல்வெளிகள், திருவிழாக்கள் என தந்தையின் தோளிலேறி காவடியாக வலம் வந்தவள். வர்த்தகப்பிரிவில் உயர்தரம் படித்துவிட்டு வீட்டிலேதான் இருந்தாள். வீட்டுவேலைகள், உறவினர்களின் வேலைகள் என எல்லாவற்றையும் எடுத்துப்போட்டுக் கொண்டு அவற்றை நிறைவேற்றிக்கொடுப்பதில் அவளுக்கு ஒரு திருப்தி. சொல்லப்போனால் அந்த வட்டாரத்திலேயே அவள்தான் படித்தபிள்ளையாக இருந்தாள். துடிப்பானவள், செல்லப்பிள்ளை. தங்கள் குடும்பத்தின் வயல் விதைக்கும்போது, முளைகட்டிய நெல்லை முதலில் எறிவதும் அவள்தான். அவளின் அழகிற்கும், குடும்பப் பாங்கிற்கும் ஏற்றாற்போல் திருமண வரன்கள் ஒன்றன்பின் ஒன்றாக அவர்களின் படலை வரை வந்து காத்து நின்றன.

"இஞ்சேர் அம்மா எனக்கு இப்ப கலியாணம் வேணாமம்மா"

சமையற்கட்டில் இருந்தவாறே தந்தைக்கான செய்தியை தாயினுடே நச்சென்று சொல்லி முடித்தாள். அப்போதுதான் வயலில் பசளை எறிந்த களைப்புடன் திண்ணையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த தந்தை வேலாயுதம், மகளின் பேச்சிலிருந்த மிடுக்கையும் இலாவகமான வேண்டுதலையும் சேர்த்து ரசித்துச் சுவைத்து, கொடுப்பில் ஒரு முறுவலுடன் மென்றுகொண்டிருந்தார். இருப்பினும் குழம்பில் மிளகு அதிகமாக இருப்பதுபோல் ஓர் ஆரோக்கியமான நெருடல் அவர் மனதில் இழையோடியது.

"உனக்கு என்னடி குறை? அழகு, படிப்பு, செல்வம் எல்லாம் அம்சமாக இருக்கிற என்ர பிள்ளைக்கு அசத்தலான ரவுண் மாப்பிள்ளையல்லாடி கொண்டுவர வேணும்! தேடவேணும்! தேடவேணும்!"

மனசுக்குள் உழன்றுகொண்டார் வேலாயுதத்தார். பிள்ளை என்னகேட்டாலும் மறுப்பு தெரிவிக்காத தந்தை, தந்தையின் சொல்லைத்தட்டாத மகள், இடையிடையே சின்னச்சின்ன ஊடல்கள் என்று ஊரே ரசித்துக்கொள்ளும் தந்தைக்கும் மகளுக்குமான உறவு, சொர்க்கலோகத்தை பூலோகத்தில் புடம்போட்டுக் காட்டிக்கொண்டிருந்தது காலம் அவர்களுக்கு.

அம்மா நளாயினியின் அவதி... "கோயில்ல மணியடிச்சுக் கேட்குது... ஆறரையாகிற்று கெதியா வெளிக்கிடுங்கோ பஸ் வரப்போகுது..! தம்பி கண்ணா! அந்தச் சோடா போத்தல்ல தண்ணிய நிரப்பி எடு..!" "சிவகாமி! காளாஞ்சி சாமான் எல்லாத்தையும் எடுத்திற்றாய் தானே பிள்ள?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமம்மா! எல்லாம் எடுத்தாச்சு!" என்றவள் ஒரு சிரிப்புடன்...

"எங்கட வீட்டின்ர கடைக்குட்டியே வெளிக்கிட்டிற்று வந்திற்றார்.. அப்ப எல்லாரும் ரெடி..!"

ஒரு சின்னக் கடி கடித்தாள் சிவகாமி தன் தகப்பனுக்கு. செல்ல மகளின் கடியையும், தலையில் மல்லிகைப் பூவுமாக, மென்நீலப் பாவாடை தாவணியில் அவளின் அழகையும் ரசித்தபடி அப்பா வேட்டியை இழுத்துச் செருகிக்கொண்டு வந்தார்.

"பேத்தியார்ர வாய்க்கொழுப்ப பாத்தியே..?"

அப்புச்சி அம்மாச்சியிடம் சொல்லி புளகாங்கிதமடைந்தார்.

"ஓமோம் தவளைக்கும் தத்தைக்கும் ரெண்டு வீடு... தேப்பனும் பிள்ளையும் என்னெண்டு தாங்கப்போகுதுகளோ?"

அங்கலாய்த்துக்கொண்டாள் அம்மாச்சி. குடும்பமே கலகலப்பாக திருக்கோணேஸ்வரப் பெருமானின் தேர்த் திருவிழாவிற்காக திருகோணமலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. சின்னம்மா குடும்பமும் வர சரியாக பஸ்சும் வந்து சேர்ந்தது. எல்லாரும் ஓடிச்சென்று படலையை கடக்கும்போது லெச்சுமி எதிர்வந்து நின்று

"அம்மா..!"

என்று வழியனுப்பினாள். கையில் வைத்திருந்த செம்பருத்திப்பூவை லெச்சுமியின் வாயில் கொடுத்துவிட்டு கையால் ஒருக்கால் லெச்சுமியை தடவிக்கொடுத்து விட்டு பஸ்ஸில் ஏறினாள் சிவகாமி. லெச்சுமி வேறுயாருமல்ல சிவகாமி செல்லமாக வளர்க்கும் வெள்ளைப் பசுதான்.

"லெச்சுமி நல்ல முழுவியளமம்பா..." அம்மா நளாயினியின் ஆசிவார்த்தையுடன்...

"ஆனந்த யாழை மீட்டுகிறாய் - அடி நெஞ்சில் வண்ணம் தீட்டுகிறாய்..! அன்பெனும் குடையை நீட்டுகிறாய் - அதில் ஆயிரம் மழைத்துளி கூட்டுகிறாய்..!" வானொலியின் பாடல் வேலாயுதத்தின் நெஞ்சில் ஓர் இனம்புரியாத புத்துணர்வை ஊன்றிக்கொள்ள திருகோணமலை நேக்கி பஸ் பறந்தது.

"நளா!"

நன்றாகப் பழகிய குரலொன்று அருகில் நின்றிருந்த ஒரு பெண்ணிடமிருந்து வந்தது. திரும்பிப்பார்த்தாள் நளாயினி.

"அடி யோகா..! எவ்வளவு காலமடி..?"

நளாயினியும் யோகாம்பிகையும் சுமார் இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்ஒன்றாக சண்முக வித்தியாலயத்தில் ஒன்றாகப் படித்த நல்ல நண்பிகள். நளாயினி சண்முக வித்தியாலய தாபகரின் தூரத்து உறவு, ஆதலால் அவளை அங்கே விடுதியில் சேர்த்து படிப்பித்திருந்தார்கள்.

"இது ஆரடி..? மகளா..? அழகா தேவதை மாதிரி இருக்காளடி!"

யோகாம்பிகையின் வாயும் மனதும் சிவகாமியின் அழகால் நிரம்பி வழிந்தது.

"எனக்கு ஒரே மகன்தான்.. அமிர்தன்! பொடியனுக்கு மூன்று வயதில தேப்பன இந்தியன் ஆமி சுட்டுப்போட்டான்.."

கலவரப்பட்டாள் யோகா. நளா, யோகாவை சமாளித்தபடி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி... மகன் எங்க கோயிலுக்கு வரல்லையா யோகா..? இப்ப எங்க பெடியள் கோயில்பக்கம்..."

தொடர்ந்தவளை இடைமறித்து..

"தம்பி தேர் இழுக்கிறானடி" முடித்தாள் யோகா.

"பிள்ளைக்கு எங்கேனும் பார்த்து வச்சிருக்கிறியாடி நளா?"

"இல்லடி! தம்பிக்கு...?"

சம்பாஷணையின் சமயோசிதத்தை புரிந்துகொண்டு மெல்ல விலகினாள் சிவகாமி. சனக்கூட்டத்திடையே கண்களால் துளாவி தந்தையைக் கண்டுகொண்டு அவருடன் கையைக் கொழுவிக்கொண்டாள். ஆனாலும் சிவகாமியினுள் ஓர் இனம்புரியாத உணர்வொன்று உருண்டுகொண்டு தேருடன் சேர்ந்து வடக்குப்பக்கமாக வலம்வந்தது. அப்புச்சி அடிக்கடி சொல்லுவதுபோல பங்குனி வெய்யில் அதன் பாட்டிற்கு வாட்டியெடுத்தது. சிவகாமி அப்பாவுடன் கோணேசரின் தேரை கும்பிட்டவாறே, அங்கிருந்த ஆலங்கிளையின் கீழே ஒதுங்கினாள்.

"அமிர்தன்! அவன் எப்படியிருப்பான்?... பிள்ளையார் தேரை இழுக்கும் பிடிவாதக்காரனோ...? முருகன் தேரிழுக்கும் அழகனோ? சீச்சீ வீரசக்தியின் தேரை அதன் தொடக்க வடத்தை பிடித்திருக்கும் அவனாகத்தான் இருக்கவேணும்!"

அவளது மனஒலிகள் தன் காதினுள் மிக உரமாக ஒலிப்பதை உணர்ந்து ஆச்சரியப்பட்டாள். அவளை அறியாமலேயே ஆலங்கிளையில் கட்டியிருந்த தொட்டில்களை அவள் கைகள் விலக்க.. அவனை நோக்கிது கண்கள்!

"பெருமானே இதுதான் அமிர்தனாக இருக்கவேண்டும்"

சிவகாமியின் தேடுதல் வலைவீச்சில் அவனது இருகயல்களும் சிக்காமல் இல்லை. இதுதான் காதலா...? கவர்ச்சியா....? எதுவாகினும் அதுவும் தேரேறி வந்து சேர்ந்தது. தேர் வலம் முடிந்ததும் அம்மாவைத் தேடினாள் சிவகாமி. அம்மா இன்னும் நண்பியுடன்தான் அளவளாவிக் கொண்டிருந்தாள்.

"அவன்தான்! அவனேதான்!... "எடுத்த வேல்கொடு பொடித்துளாதாவெறி நினைத்தகாரியம் அனுகூலுமேபுரி பெருமாளே!"

வேண்டுதலை பெருமான் ஏற்றிருக்க வேண்டும். அவன்தான் அமிர்தன் தன் தாயாரின் அருகே நின்றுகொண்டிருந்தான். நல்ல சகுனம்.. நல்ல நாள்.. ஆண்டவன் சந்நிதி.. சிவகாமிக்கும் அமிர்தனுக்குமான மணமாலையை ஆண்டவன் அங்கேயே கோர்த்துக்கொண்டிருந்தான்.

காலம் உருண்டுகொள்ள, வைகாசி அவர்களுக்கு மூன்று முடிச்சு இட்டது. அமிர்தன் ஓர் கணணிப் பட்டதாரி, மென்பொருள் பொறியியலாளன். தொழிலைப்போன்றே அவனும் மென்மையானவன். நிரம்ப சம்பாதித்து நன்றாக வாழவேண்டும் என கனா காண்பவன். சிவகாமி தனக்கு எல்லாவகையிலும் ஏற்றவள்தான் என்று உணர்ந்திருந்தான். திருமணம், நாலஞ்சடங்கு என்று தடல்புடலாக நடைபெற்று நாட்களும் நகர்ந்தன. அம்மாச்சி எதிர்வு கூறியதைப்போல், தத்தை திருமலையிலுள்ள தனது புகுந்த வீட்டிற்கு நகர்ந்தாள். வேலாயுதத்திற்கு மகளைப் பிரிதல் என்பது, சக்கரவியூகத்தில் அகப்பட்டுக்கொண்ட அபிமன்யுவின் நிலையைத் தந்துகொண்டிருந்தது. வீட்டிற்கோ, இளவரசியை பிரியும் ஓர் அரசவையின் நிலை. சிவகாமி தன் பிரிவை ஒருவாறாக சமாளித்துக் கொண்டிருந்தாள். கனமான தருணம். அடக்கமுடியாத சிலநேரங்களில் அவளின் பிரிவுத்துயரம் விழிகளில் துளிகளாய் எட்டியெட்டிப் பார்த்தது. இருப்பினும், அத்தனை குடும்ப உறவுகளையும் அவள் தன் கைப்பேசியில் அடைத்து வைத்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி அம்மா இருக்கிறீங்க..? அப்பா....?"

"இஞ்ச எல்லாரும் சுகம் பிள்ள... அப்பா வயலுக்குப் பொயிற்றார்.. நீ எப்படி இருக்கிறாய் பிள்ள?"

"நான் நல்லாயிருக்கிறன் அம்மா!"

"என்ன சாப்பாடு சமச்சநீ...? உனக்கு மா இடிச்சு வறுத்து வச்சிருக்கிறன்... அப்பா நாளை நாளண்டைக்கு வருவார் குடுத்து விடுறன்"

சம்பாசனைகள் சாதரணமாகத் தெரிந்தாலும் பாச உணர்வுகளின் ஆழமும், அதற்குள் அமிழ்ந்துகொள்ளும் பிரிவின் கனதியும் தோன்றாப் பொருளாய் அணிவகுத்தன. ஆனாலும், அமிர்தனும் யோகாவும் இவற்றை அறிந்திராதவர்களல்லர். சில காலம் வார இறுதி நாட்களில் அவர்களது பொழுதுகள் தம்பலகாமத்திலேயே கழிந்தன. பழகிப்போன மறக்கமுடியாத வாழ்க்கைமுறை, பழகவேண்டிய மறுக்கமுடியாத வாழ்க்கைமுறை இரண்டிற்கும் நடுவே ஊசலாய் ஆடிக்கொண்டிருந்தாள் சிவகாமி. காலம் எனும் மருந்து, சிவகாமியின் புது அத்தியாயத்தில் அவளைத் தாயார்படுத்திக்கொண்டு இருந்தது. அன்பான கணவன், ஆறுதலான மாமி, அவளுக்குப் பிடித்தமான நிறைவான, வசதியான புது வாழ்வு இனிக்கத் தொடங்கியது.

"இஞ்சேர் சிவகா..!"

"ஓம் மாமி!"

"ஒருக்கால் கோணேசர் அப்பாக்கு நல்ல நேத்திக்கடன் ஒண்டு வைப்பமடி!.. உவன் கொம்பியூட்டர கட்டிப்புடிச்சிற்று இருக்கிறான்... சனம் என்ன கதைக்கும் எண்டு ஒண்டும் விளங்காது அவனுக்கு... மூண்டு வரிசமாகியும் வயித்தில பூச்சிபுழு ஒண்டும் விளையாட்டி அயலட்டை குசுகுசுக்கத் தொடங்கீரும் பிள்ள.." யோகா தன் அங்கலாய்ப்பை மருமகளுக்குத் தொட்டுக் காட்டினாள்.

"ஓம் மாமி... கோணேசரப்பாதானே எங்கள சேர்த்தே வச்சவர்... அவருட்டத்தான் கேட்கவேணும்!"

சமையலறையில் நடந்த உரையாடலின் பொழிப்பை அப்போது அங்கே வந்த அமிர்தன் விளங்கிக் கொண்டான். "அம்மா நாளைக்கு காலையில கோணேசரிட்ட போவம்..."

இரவிரவாக சிவகாமியும் அமிர்தனும் நேர்த்திக் கடனுக்காக தங்கள் கைகளினாலேயே ஒரு தொட்டிலை செய்து முடித்தார்கள். கோணேச்சரத்தில் உதயப்பூசை முடிந்ததும் அந்த தொட்டில்கள் கட்டியிருக்கும் ஆலங்கிளையில் தமது தொட்டிலையும் இருவரும் சேர்ந்து கட்டி ஆட்டிவிட்டுக் கொண்டனர்.

"இந்த ஆலங்கிளையின் கீழ் நின்றுதானப்பா உங்களை முதன்முதலாய்க் கண்டுகொண்டேன்... ஞாபகம் இருக்கா..?"

சொல்லும்போது சிவகாமியின் முகத்திலிருந்த பிரகாசம் அவர்கள் வாழ்வின் அந்நியோன்னியத்தை கோடிட்டு நின்றது.

"ஓமடி... மறக்க முடியுமோ சிவகா..?" என்று அவளை அணைத்தவாறே...

"அப்பா கோணேசா....!"

அமிர்தனின் பெருமூச்சு, வேண்டுதலின் உறுதித்தன்மையை வெளிப்படையாகக் காட்டியது.

"அம்மா..! சந்தோசமான செய்தி!" அமிர்தன் சொல்லிமுடிப்பதற்குள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குத் தெரியுமடா தம்பி... கோணேசர் சும்மா ஆளே?"

என்று சிவகாமியை கட்டியணைத்து இருவரையும் உச்சிமோந்து கொண்டாள் யோகா. "சிவகா! அம்மவிற்கும் ஒருக்கால் எடுத்துச் சொல்லிவிடு பிள்ள.. இருங்கோ பாயாசம் காய்ச்சிக்கொண்டு வாரன்.."

சமையலறை நோக்கினாள் யோகா. சோர்வு அசதிகள் நிறைந்தாலும், நிறைவான உணவு, மகிழ்ச்சியான தருணங்கள் என அந்தப் பத்துமாதங்களும் இருந்தன எங்கள் வீட்டு மகாராணிக்கு. ஒரு புது உறவின் வருகைக்காய் மகப்பேற்றுக் கூடத்தின் வாசலில் குடும்பமே தவங்கிடந்தது. வேலாயுதத்தார் அங்கு மிங்குமாக நடந்து திரிந்தார்.

"ஐயா உங்களுக்குப் பேத்தி பிறந்திருக்கிறாள்"

தாதி மலர்விழியின் அறிவித்தலில் மனிதருக்கு ஆனந்தக்கண்ணீரே வந்துவிட்டது. தன் கருவண்டுக்கண்ணை உருட்டி உருட்டிப் பார்த்தபடி மாம்பழக குஞ்சொன்று அமிர்தனின் கைகளில் தவழ்ந்தது. கைகால் முளைத்த மல்லிகைப் பூவொன்று அமிர்தனின் நெஞ்சில் உதைந்து உதைந்து பார்த்தது. தந்தையின் முகம்கண்டு ரோஜா இதழ் திறந்து முதன்முதலாய்ச் சிரித்தது அந்த மழலை. இந்தப் பூக்களின் இளவரசிக்கு "கோதை" என திருநாமம் சூட்டி வைத்தனர் தாயும் தந்தையும்.

"அம்மா! அம்மா!! போன் அடிக்குதம்மா!... வட்சப் கோல்...!"

கோதையின் செல்லக் குரல்! அப்போதுதான் நினைவிற்கு மீண்டாள் பாறையின் மீது அமர்ந்திருந்த சிவகாமி.

"சிவகா! எங்க கோயில்லையா நிக்கிறீங்க...? இப்பதான் வேர்க் முடிஞ்சு திரும்பிக் கொண்டிருக்கிறன்... இஞ்ச சரியான குளிரடி..."

அமிர்தனைக் கண்ட சிவகாமியின் முகம் விடிந்து கொண்டது.

"சாப்பிட்டீங்களாப்பா..?"

"இனி போய்த்தான் சமையல்"

சிவகா மனம்வருந்திக்கொண்டாள் ஆனால் காட்டிக்கொள்ளவில்லை. இங்கே இருக்கும்போது கணவனுக்காக விதம்விதமாய் சமைத்துப்போட்ட தன்கைகளை உரசிக்கொண்டாள்.

"சரி... கோதை எங்கே..?" தன் ராஜகுமாரியை தேடினான் அமிர்தன்.

"கோதை.. அப்பா..!"

கூப்பிட்டாள் சிவகாமி. சொன்ன மாத்திரத்திலேயே ஓடிவந்தாள் கோதை.

"அப்பாக் குட்டி" அவள் கூப்பிட்ட சத்தத்தை விடவும் அவள் உணர்வின் சத்தம் அதிகமாகவே இருந்தது.

"பிறந்தநாள் வாழ்த்துக்கள் மகள்!"

"தாங்ஸ் அப்பாக்குட்டி!"

"இந்தப் பிறந்தநாளுக்கு அப்பா பிள்ளைக்கு கிட்ட இல்ல..."

அமிர்தனுக்கு கண்கள் கசிய சிவகாமியின் கண்கள் குளமாகின.

"அப்பா பிள்ளைக்கு கனடா சொக்கோலேட் அனுப்பியிருக்கிறன்... என்ர செல்லக்குட்டி நாளைக்கு உங்கட பிரண்சுக்கு கொடுங்கோ..! "அப்பா பிள்ளையின்ர பிறந்தநாளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று கவலைப் படக்கூடாது... அப்பா பிள்ளைக்காகத்தானே உழைக்க வந்திருக்கிறன் என்ன..?"

"ஓம் அப்பா..!"

"சிவகா!"

"ஓமப்பா சொல்லுங்கோ.."

"பிள்ளை என்ன கேட்டாலும் வாங்கிக் கொடு என்ன!"

"சரியப்பா!"

"நான் பிறகு எடுக்கிறன்! பாய் குட்டி...! பாய் சிவகா..! கவலப்படாம சாப்பிடு என்ன...!

கோணேசப்பெருமானிடம் கண்ணீரைக் காணிக்கையாக்கிவிட்டு கோதையுடன விடைபெற்றாள் சிவகாமி.

அன்னக்கூட்டங்கள் அணிவகுத்திருந்த தடாகமாய் இருந்தது ஸ்ரீ சண்முக இந்துமகளீர் கல்லூரியின் காலைக்கூட்டம்.

"கீழ்ப்பிரிவு தனி இசை.. அபிநயம்.., முதலாமிடம் லக்ஸ்மிதா சிவசங்கரன்"

தமிழ் திறன் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. கரகோசங்கள் வானைப் பிளந்தன. அதில் கோதையின் பிஞ்சுக்கையின் தட்டலும் இருந்தது. லக்ஸ்மிதா கோதையின் வகுப்புத்தோழி.

"லச்சு...! ஆரடி உனக்குப் பாட்டு அபிநயம் எல்லாம் பழக்கிவிட்டது"

"அப்பா தானடி எல்லாம் சொல்லித்தந்தவர்... அப்பாட்டச் சொல்லி உனக்கும் ஒரு பாட்டு எழுதித்தாறன் அடுத்தமுறை பாடிறியாடி...!"

கோதையின் முகம் மலர ஆதரவு தந்தாள் நண்பி.

"என்ர அப்பாவும் நல்லா நடிக்கப் பழக்கிவிடுவாரடி லச்சு... ஆனா அவர் வெளிநாட்டிலடி..."

கோதையின் வார்த்தைகளில் அவள் இயலாமை தொனித்தது.

உவர்மலையிலிருந்தது சிவகாமியின் வீடு. வயல், வரப்பு, சொந்தபந்தங்கள் என்று பறந்து திரிந்தவளுக்கு வீட்டில் மாமி, மகள், ஒரு பொமறேனியன் நாய்க்குட்டி, நாலு சுவர். என்னதான் வசதிகள் இருந்தாலும், வாழ்க்கை முடமாகத் தெரிந்தது. கோதையின் இப்பருவத்தில், தான் வாழ்ந்த வாழ்வின் சுவாரஸ்யங்களை மீளவும் அசைபோட்டு திருப்தியடைந்து கொள்வாள். என்னசெய்வது, தன் மகளுக்கு அந்த அழகிய தருணங்கள் வாய்க்கவில்லையே எனற கவலை அவள் எண்ணத்தின் ஒரு பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டுதானிருந்தது.

அமிர்தன், அன்பானவன். சிவகாமியையும் கோதையையும் இரு கண்களாகப் பார்த்துக் கொள்பவன். அவனுக்கு உலகமே அவர்கள் தான். ஓய்வு நேரங்களில், விளையாடுவது, சமைப்பது, சுற்றுலாபோவது.. ஒரே குதூகலமான வாழ்க்கை, அந்தச் சிறு குடும்பத்தில் கொடியேறி இருந்தது. நாலு சுவருக்குள் ஒரு நந்தவனமே பூத்துக் குலுங்கியது. கோதைக்கு நடைபழக்கியதும் அவனே. ஏடு தொடக்கியதும் அவனே. அவனது உந்துருளியிலேறி மகளுடன் மாலை நேரங்களில் கடற்கரை, கோயில்கள், உட்துறைமுக வீதியில் நின்று சூரிய அஸ்தமனம் பார்ப்பது என சுற்றித்திரிவான். இரவுவேளைகளில் முகமூடி, மீன்தொட்டி, ஓவியங்கள் என பாடசாலையில் கோதைக்குக் கொடுத்துவிடும் அத்தனை வீட்டுவேலைகளையும் மிக நேர்த்தியாகச் செய்துகொடுப்பது, கோதைக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் சொல்லிக்கொடுப்பது என தன் குடும்பத்திற்குப் பொன்னுலகம் படைத்தான் அமிர்தன்.

"அப்பா நீங்க ஒட்டித்தந்த முயல்குட்டி நல்ல வடிவா இருந்ததெண்டு வகுப்பில எல்லாரும் பாராட்டினாங்கள் அப்பா"

"என்ர செல்லக்குட்டி நீங்க ஒருநாளும் வகுப்பில இரண்டாம் பட்சமாகப் போகக்கூடாது.. அதுக்காக.. பிள்ளைக்கு அப்பா எல்லாவற்றையும் பெஸ்ட்டாகச் செய்து தருவனடி!"

தந்தைக்குள் புகுந்து கொண்டாள் கோதை. இறுகப் பற்றிக்கொண்டான் அமிர்தன். மூவரும் ஒன்றாகத்தான் நித்திரைக்குச் செல்வார்கள். ஒவ்வொரு நாளும் தந்தையின் கதைகேட்டு அவன் மார்பிலேயே தூங்கிப்போவாள் கோதை.

"என்னதான் இருந்தாலும், இன்னமும் உழைக்கவேணும் சிவகாமியையும் கோதையையும் இன்னும் நல்லாக வச்சிருக்கவேணும்"

என்று அமிர்தனது எண்ணம் கோடிட்டுக்கொண்டே இருந்தது.

படுக்கையறையில் தந்தையின் மார்பில் உறங்கிக் கொண்டிருந்தாள் கோதை.

"நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவ எடுத்தீங்களாப்பா..."

அருகே வந்தமர்ந்த சிவகாமின் தழுதழுத்த குரல் அவளது கலக்கத்தை அப்படியே கொட்டியது.

"சிவகா..! குழந்தைமாதிரி... ஏன் இப்ப கவலைப்படுகிறாய்..? ஒரு அஞ்சு வரிசம் தானே பிள்ள... நல்லொரு ஒபர் வந்திருக்குது.. இப்ப போய் உழைச்சிற்று வந்திற்றன் எண்டால்.. பிறகு உங்களோடுதானே.."

சிவகாமியின் முதுகைத் தடவி அப்படியே அவளைத் தழுவிக்கொள்ள கரைந்த மனது கண்ணீராய் உதிர்ந்தது.

"சந்தர்ப்பங்களை ஒரு முறைதான் கடவுள் கொடுப்பார் பிள்ள... அதை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! நல்ல வேலை.. நல்ல சம்பளம்.. நல்லா உழைச்சத.. பிறகு.. நாம நல்லா அனுபவிப்பமே பிள்ளை!"

ஒருவாறாக சிவகாமியை சமாளித்துக்கொண்டிருந்தான் அமிர்தன். சிவகாமி தன் தந்தை வேலாயுதத்தின் இடைவெளியை அமிர்தனை வைத்தே நிரப்பிக்கொண்டிருந்தாள். எதிர்வரும் காலங்களில் அதில் ஏற்படப்போகும் இழப்பு ஒருபுறம், தன் செல்ல மகளுக்கு தந்தையின் பாசம் அந்நியப்படப் போகின்றதே என்ற ஏக்கம் மறுபுறமுமாக அவள் மனது தீப்பாய்ந்து கொண்டிருந்தது. தடுக்க முடியாத சம்பிரதாயம், தவிர்க்க முடியாத கணவனின் சந்தர்ப்பம் இரண்டும் சேர்ந்து அமிர்தனை கனடாவிற்கு வழியனுப்பி வைத்தது.

சில நாட்களில்... தந்தையின் இடைவெளி கோதையின் மனவெளிகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தியிருந்தது. தந்தைப் பாசத்தின் ஆற்றாமை அவளில் முன்கோபமாக வெளிப்பட்டது. மனஉறக்கம், எதிலும் ஏனோதானோ என்ற நிலை... அவள் பாடசாலையில் பின்தள்ளப்பட்டாள்.

"என்ன... கோதா..? வரவர மாமியார் கழுதைபோல போகுது..."

அவளுடைய பாடப் பதிவுகள் திருத்தும்போது ஆசிரியர் அவரது கணிப்பைத் தொகுத்தார். சென்றமுறை பாடசாலையின் ஆங்கிலதின நிகழ்வுகளில் கோதை பிரதான பாத்திரமேற்றிருந்தாள். ஆங்கிலக் கவிதை, பேச்சு, அறிவிப்பு என அத்தனையும் அசத்தலாக இருந்தது. ஆனால் இம்முறை அவளைத் தயார்படுத்த அவள் தந்தை அவளுடன் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அம்மா..!”

“ம்... என்னம்மா?”

“போன லீவுக்கு லக்ஸ்மிதா அவள்ர அப்பா அம்மாவோட கண்டிக்கெல்லாம் போய் பார்த்து வந்திருக்கிறாளம்மா.. நாங்களும் எங்கையாச்சும் போய்வருவோமா அம்மா..?”

சிவகாமியின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தவாறே தாயிற்குப் பேச்சுத் தொடுத்தாள் கோதை.

“அப்பா லீவுல வருவார்... வந்தவுடனே போவோம் கண்ணா... இப்ப பேசாமப் படுங்கோ செல்லம்!”

சிவகாமிக்கு இதைவிட வேறேதும் விடை தெரிந்திருக்கவில்லை. இருந்தும், கோதைக்கு இது பலமுறை பழகிப்போன பதிலாகத்தான் இருந்தது. காலத்தின் வரட்சியில் அவர்களின் நந்தவனம் வாடிக்கிடந்தது.

வாசலில் முச்சக்கர வண்டியொன்று வந்து நின்றது.

“மணியண்ண சொட்டுப் பொறுங்கோ இந்தா வாறன்” வீட்டிற்குள்ளிருந்து சிவகாமி பதற்றப்பட்டாள்.

“சரி பிள்ள அவதிப்படாதே.. நான் நிற்கிறன்” ஓட்டோ மணியண்ணனின் பதில் சிவகாமிக்கு ஆறுதலளித்தது.

“கோதா... கொஞ்சம் கெதியா வெளிக்கிடம்மா”

“ஓமம்மா.. இந்தா வந்திற்றன்”

என்றபடி புத்தகப்பையுடன் ஓடிவந்தாள் கோதை.

“மாமி மெல்ல எழும்பி வாங்கோ... நான் உங்களைக் கொஞ்சம் பிடிக்கவோ மாமி...”

“வேண்டாம் சிவகா... நான்வாறன்..”

மாமி யோகாவிற்கு நெஞ்சுவலி வந்திருந்தது. மாமியின் நெஞ்சுவலி ஒருபுறம், கோதை மறுபுறம் என சக்கரமாகச் சுழன்றாள் சிவகாமி. அன்றுதான் முதன்முறையாக மகள் கோதையை தனியே வேறொரு வீட்டில் விட்டுச்செல்லவேண்டிய கட்டாயம்.

“எங்கே விடுவது..?” மனதின் தேடலில், “கோதையின் வகுப்புத்தோழி லக்ஸ்மிதாவின் வீடு பொருத்தமாகத்தான் இருக்கும்!” என்று தென்பட, கோதை லக்ஸமிதாவின் வீட்டில் விடப்பட்டாள்.

மாமியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அன்று இரவு முழுவதும் மாமியாருடன் கூடவே இருக்கும்படி மருத்துவர்கள் கட்டளையிட்டிருந்தனர். லக்ஸமிதா வீட்டில் தந்தையுடன் நகைச்சுவையாக உறவாடி மகிழ்வது கண்டு அங்கலாய்த்துக்கொண்டாள் கோதை.

யோகா குணமாகி வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பியிருந்தார்.

“இப்ப எப்படி அம்மா?” கைப்பேசியினுடே தாயின் நலன்களை விசாரித்துக் கொண்டிருந்தான் அமிர்தன்.

“கோதா! இந்தா... அப்பா கதைக்கறார்!”

அம்மா கோதாவை அழைத்தார்.

“அப்புக்குட்டி எப்படி இருக்கிறீங்கடா..?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் நல்லா இருக்கிறனம்மா.. என்ர செல்லக்குட்டி.. நீங்க எப்படி..?"

"ம்... சுகமப்பா..!"

அப்புச்சி வேலாயுதத்தார் வாங்கிக் கொடுத்த உண்டியலை கையில் வைத்திருந்தாள் கோதை.

"கோதாக்குட்டி இதில கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்கிற காசை... ஒரு நல்ல விசயத்திற்குத்தான் செலவு செய்யவேணும்" கோதைக்கு அன்புக்கட்டளை பிறப்பித்திருந்தார் வேலாயுதம்.

"அப்பா! உண்டியல் நிரம்பீற்றப்பா..!" தந்தையிடம் கூறினாள் கோதை.

"உண்டியலை அம்மாட்ட கொடுங்கோ... பிள்ளைக்கு என்ன வேணுமெண்டாலும் அப்பா வாங்கிக் கொடுத்து விடுறன்"

"இந்தக்காசுக்கு எல்லாம் வாங்கலாமா அப்பா..?"

"பிள்ளையின்ர குஞ்சுக்கையால சேர்த்த காசுக்கு பெறுமதி அதிகம் கண்ணா.. என்ன வேணுமெண்டாலும் கேளுங்கோ!"

அமிர்தன் சொல்லி முடித்ததுதான் தாமதம்.

"எனக்கு என்ர அப்புக்குட்டி நீங்கதான் வேணுமப்பா.. நீங்க என்னோடயே இருக்கவேணுமப்பா"

தாயிடம் உண்டியலை நீட்டினாள் கோதை ஓர் அனுக்கத்துடன். பிள்ளையை இறுக அணைத்துக்கொண்டாள் சிவகாமி. சிவகாமியின் மனதில் இறுகிக்கிடந்த கண்ணீர்த்துளிகளெல்லாம் கோடை மழையாய் கொட்டி, கோதையை ஆமோதித்தது. அமிர்தனின் கண்களும் குளமாகியது. மறுகணமே தன்வேலையை உதறிவிட்டு தன்மூன்று தோழிகளிடமும் வந்து சேர்ந்தான் அமிர்தன். அந்த நாலு சுவர் நந்தவனம் மீண்டும் குலுங்கியது.

**முற்றும்!**

**ஆக்கம்**
**சுந்தரலிங்கம் சிவசங்கரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## බෝද්‍රා හැන්නදිගේ පවනි කවීෂා ද සිල්වා
## ජ්‍යෙෂ්ඨ අංශය - පද්‍ය රචනා (සදැස්)
## "නොමිනිසුන් අභිමුවේ වියරු වූ මිහිමව් සෙනෙහේ"

වපුරයි ජල කඳ කෙත්බිම් වනසා රටවැසියන්ගේ මනස බිඳ
පරිසර මාතා කුරිරුව සමහර උදවිය නොසිතු ලෙද
මතුවට තවත් කරදර වෙනවලු පවසති පඬිදන පෙරට වැද
පරිසරය රැක ගනිමු කියා මට මෙන් ඔබටත් හිතෙන වද

ගහ කොළ නැසුවා ගඟ ඔය කැඩුවා තණ්හාවෙන් දෙයැස වැහී
යහපත නසමින් පිරිපෙත වැඩුවේ වැජඹෙන්නාටයි කරල පැහී
ඉහගෙන කෑමෙන් ඉහලට යෑමේ අදහස අරටු වැහී
කහ වැහි රතු වැහි වාගේ කල් යන විට ගල් වැහිද වහී

සුන්දර කැලෑ මන්දිර ඉදිවී ඉවත යමින් නොයෙක් දෙනා
මන් පිනවන සිත් අල්වන විසිතුරු නිමැවුම් රැසක් තනා
මංපෙත් බෝක්කු ඉදිවී මුළු රට දැන් අලුත් වුනා
වැඩිකල් නොයා අප සැමටම දඩුවම් ලැබුණා

පැවතුනු නියඟය ගෙනදුන් පීඩාවට තෙත්වූ නමුදු දුරෑ
අවතැන් කරවා ඇත ජන ජීවිත ඒ වැස්සෙම අප නොසිතු විරෑ
දවසට ගසක් සිටුවා පරිසරය පණමෙන් රකින තුරෑ
සුවබර යුගයක සැනසිලි සුවයක් නව ජීවනයක් ලැබුම බොරු

කලබල වීමෙන් සමහර ඇත්තෝ ඉවසීමත් හුරු පුරුදු නැති
පලනැති දේවල් ඔළුවට දාගෙන පෙන්වයි පවතින අමන ගති
හෙළ ගුණදම් උඩු සුළඟට හසුවී ඈතට විසිර යති
බල බල මේවා සමහර උදවිය සතුටින් සිනා සෙති



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

සිත්වල කිසි අනුකම්පාවක් ගුණදම් හතර අතින්
බලයට බරවී සමහරු හැසිරෙති කදුලු පැලේ ලක්මවගේ නෙතින්
ජාතික ගීයත් නැටුමට අරගෙන සමහරු දගලති බමන මතින්
මේ අය අතරේ කෙලෙසක කාලය අපි ගෙවමු ඉතින්

ලෝක විනාශය නූනත් ලොකු විනාශයකි රට හැම පැත්තේ
මෙකී විපත් මැද අනාත වූ අය ලක්ෂ ගණන් බව කිව යුත්තේ
ශෝක වෙමින් බොරුවට තව සමහරු වැරදිවලට පෙළඹී ඇත්තේ
මේක නතර නොවුනෝතින් කෙලෙස වෙයිද රට තුළ තත්වේ

සුන්දර මිනිස්කම් ලොව මිනිසා මොන පැත්තට යයිද අනේ
ඉන්න හිටින්නට බැරිවන තරමට යලි යුධගිනි ඇවිලෙයිද අනේ
දන්න කෙනෙක් නැත ආගන්නට කවදා සැනසුම දෙයිද අනේ
මීන්පසු රටතොට ගොස් ඇවිදින්නට පුළුවන් වෙයිද අනේ

උසස් කියන තැන්වල ඇති සමහරු ඇයි ද මෙලෙස වරදට බැඳුනේ
දවස් ගෙවන අන්දම සිහිවන විට ගිනි ඇවිලෙනු හිස මුදුනේ
අහස් කුසට විහිදී පැතිරෙනු ඇත හමන දුගද දස අත රැඳුනේ
මනුස්සක නම් දකිනු අසීරුය කුමක්ද හිමි සැඳුනේ

ධනයට බලයට තැන හිමිවන විට ගුණයට දහමට නිසි ලකුණු නොදී
අණසක නොතකන සොබා මතුවෙයි හැඳියා වනසන කලදී
පින ලද පරපුර වදවී යද්දිත් ඒ ගැන ගානක් නැතිව හිඳී
මිනිස්කම කළුනික වන අන්දම තාමත් නැතිවද ඔබට පෙනී



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை இலக்கியம் உருவாக்கும் மனிதம்

வெறி கொண்டு அலைகின்ற கூட்டம் ஒன்று
நெறி கொன்று காரியங்களை அற்றது இன்று
ஈனச் செயல்களால் இதயம் கனத்ததே அன்று
ஈரமுடன மனிதம் காக்க திடம் கொள்வோம் இன்று

மக்கள் மனதில் வன்செயல் குறைந்திட
மனித எண்ணங்களில் வக்கிரம் தளர்ந்திட
மறநெறி நீங்கி அறவழி நிலைத்திட
மாந்தர்க்கு நாம் பண்பாட்டை ஊட்டுவோம்

பிரபஞ்சத்தை இயக்கும் கடவுள் ஒன்றே
பிரம்மன் படைத்த மதங்களும் ஒன்றே
பிறர்க்கு உதவிடும் அன்பும் ஒன்றே
பிரியாமல் காத்திடும் நம்பிக்கை ஒன்றே

செயற்கரிய செயல்கள் பல செய்திடலாம்
செயல்களால் சிந்தனை பல வளர்த்திடலாம்
செம்மொழி இலக்கியத்தை நன்றாய் கற்றிடலாம்
செவ்வக்கலைகளை சேர்த்தே இணைந்திடலாம்

பெறுபவரை எண்ணி மழை பொழிவதில்லை
எடுப்பவரை எண்ணி பானு சுடர் விடுவதில்லை
ஆறுபவரை எண்ணி தரு நிழல் தருவதில்லை
பெற்றோரை தேர்ந்து குழந்தை பிறப்பு எடுப்பதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக மக்கள் ஒன்றென்று உணர்த்திடுவோம்.
சக மதங்கள் ஒன்றென்று கௌரவிப்போம்
சக மாந்தர் ஒழுக்கமாய் பழகிடுவோம்
சக உதிரமாய் நல்வாழ்வு வாழ்ந்திடுவோம்

பல்லின கலாசாரம் அறிந்திடுவோம்
பன்மொழி வித்தகராய் விளங்கிடுவோம்
மதம் அற்ற மானிடராய் மலர்ந்திடுவோம்
மனு நீதி மனம் கொண்டு வாழ்ந்திடுவோம்

இலக்கியம் புகட்டிடும் இலட்சிய வாழ்வு
இன்பக் கலைகள் ஊட்டும் உணர்வுச் செறிவு
இவ்விரண்டால் மானிட விருட்சங்களை வளர்த்து
இலக்குள்ள இன்பமான தேசத்தை உருவாக்குவோம்.

**ஆக்கம்**
**சுரபிகா தவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## මරක්කල මානගේ නිරන්ජන් ධනුෂ්ක
## අවු 18 ට වැඩි - පද්‍ය රචනා තරගය (නිසැදැස්)
## "විභාගය ලියන අම්මලා"

බුදු පහනට දොහොත් මුදුන් තබා වැඳ
දරුවාව විභාගයෙන් සමත් කර දෙන ලෙස
යටිගිරියෙන් කෑ මොර දී ගෙන හඩ
බිම පෙරළි පෙරළී වදියි මුනිදු ..............

දරුවන්ගේ අත අල්ලා ගෙන හයියෙන්
ටියුෂන් පන්තියෙන් තව ටියුෂන් පන්තියකට
හරකෙකු ඇද ගෙන යන විලසින්
දරුව ව ඇද ගෙන යයි හති ලා ගෙන ..............

යන්තර මන්තර ගුරුකම් අභියස වැඳ
සන දෙවියන්ගේ පා මුළ වැඳ වැටී හිඳ
පළතුරු වට්ටි එළි වැටි පූජා කරමින්
නුවණ පතයි විභාගය ලියන දරුවගේ මව ..............

එකිනෙකට වෙනස්කම් කරමින් ටොකු ඇන
දරුවගේ විභාගය සිඳ බිඳ කුඩු කරමින්
පොත පත පමණක් ගෙනවිත් තබමින්
මවුන් බලයි කකුලක් එකිනෙක දමමින් ටෙලි සිත්තම ..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඔවුන් නැටූ කෙළි සෙල්ලම් අද දරුවට
අගුළු දම් ලොක් කොට හිත දැඩි කොට
අනේ අපොයි අසරණ සැම දරු කැළ
විභාගය නිසා විඳවති දුක ..........................

පහන් එළි වට්ටියක් පුදා දරුවාගේ
නුවන ද පැතුවේ නිදහස වැට කොට බැඳ
නමුත් මව්නි නුඹෙ නුවන ද අඩු වී ඇත විභාගයෙන්
තරක ද එය වැඩිකර ගන්නට සිතුවොත් ......................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடனும் இலக்கியமும் கலையும்

வரலாற்றைக் கற்பதற்கு மூலாதாரங்கள் இன்றியமையாதன. இறந்த காலத்தைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மூலாதாரங்கள் பல்வகைப்படும். மூலாதாரங்களின் அடிப்படையில் வரலாற்றைக் கட்டியெழுப்பும் முறை, வரலாற்றைக் கற்பதனால் பெறதக்க பயன்கள் என்பன பற்றியும் பல்வேறு(பல்வகைப்பட்ட) கைத்தொழில்களில் ஈடுபட்டவர்களும் புராதன சமூகத்தில் வாழ்ந்து வந்தனர் என்பன பற்றியும் அறிந்து கொண்டு அதனடிப்படையில் வாழ்வதன் மூலம் சிறந்த மனிதர்களைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதுடன் சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தையும் கட்டியெழுப்பலாம்.

எழுத்தாவனங்கள் அல்லது ஆக்கங்கள் மூலம் முற்கால மனித செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதனால் அவை மூலாதாரங்கள் எனப்படும். இவ்வாறான மூலாதாரங்களின் மூலம் பெற்றுக் கொள்ளும் தகவல்களைத் தர்க்க ரீதியாகக் கற்கும் போது அவ்வக் காலப்பகுதிக்கான மனித வாழ்க்கை பற்றிய வரலாறு கட்டியெழுப்பப்படுவதுடன் இன்றைய சமுதாயத்தில் வாழும் மனிதர்களிடையே ஓர் உள்ளுணர்வு மாற்றத்தைக் கொண்டுவர முடியும். அவ்வாறு நிகழ்ந்தால் நமது தேசத்தில் உள்ள மனிதர்கள் தம் வாழ்க்கையை மாற்றி இந்த தேசத்தில், அமைதியானதும், ஒழுக்கமானதும், சிறந்தவர்களாகவும் மற்றும் முழுமையான மனிதர்களைக் கொண்ட தேசத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

அநுராதபுர ஆரம்ப காலம் முதல் இலங்கை வெளிநாடுகளுடன் வர்த்தக தொடர்புகளைப் பேணியமையால் இந்து சமுத்திரத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகமான வெளிநாட்டவர்கள் இலங்கைப் பற்றி அறிந்திருந்தனர். எனவே, கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டவர்களால் எழுதப்பட்ட நூல்களில் இலங்கைப் பற்றிய சில குறிப்புக்கள் அடங்கியுள்ளன.

நெடுங்காலத்துக்கு முன்னிருந்தே, இலங்கை, இந்தியாவுக்கிடையில் நல்லுறவு நிலவி வந்தது. எனவே இந்தியாவின் சில நூல்களில் இலங்கைப் பற்றிய தகவல்கள் அடங்கியுள்ளன. தென்னிந்தியாவில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு முதலிய தமிழ் இலக்கியங்களில் கூட இலங்கைப் பற்றி எழுதப்பட்டுள்ளது, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த கி.பி 16ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கைப் பற்றிய நூல்களை எழுதுவதிலும் வெளிநாட்டு நூலாசிரியர்கள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

வேறு நூலாசிரியர்கள் போலவே, இங்கு வருகை தந்து தகவலறிந்து எழுதியுள்ள நூலாசிரியர்களும் காணப்படுகின்றனர். இலங்கைக்கு வருகை தந்தும் தேச சஞ்சாரிகளிடமிருந்து தகவலறிந்தும் வெளிநாட்டு நூலாசிரியர்கள் தமது நூல்களில் இலங்கைப் பற்றி எழுதியுள்ளனர். அவ்வாறான நூல்கள், அறிக்கைகள் அடக்கியது நம் தேசம்.

வரலாற்றுக் காலங்களை ஒழுங்கு முறைப்படுத்தவும், வெவ்வேறு காலக்கட்டங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கும், ஒரு நூலின் மூலம் உறுதிபடுத்த உதவுதற்கும், ஒரு நாட்டின் வெளிநாட்டு உறவுகள் பற்றி அறிந்து கொள்வதற்கும் (குறிப்பாக வெளிநாட்டு இலக்கிய நூல்கள்) இலக்கிய மூலாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் புராதன காலத்துக்கு முன்னைய காலம் பொதுவாக வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சார அடிப்படையிலான இரு கட்டங்களைக் கொண்டது. அவையாவன, நீண்ட காலம் நிலைத்திருந்த கற்காலம், தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி, உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம் என்பனவாகும்.

மேற்படி காலப்பகுதிகளில் கற்காலம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றும் இரண்டாவது காலப்பகுதி முன் வரலாற்றுக் காலம் என்றும் பெயர் பெறுகின்றன. இவற்றை அறிந்து கொள்வதன் மூலம் அறிவுள்ள மனிதர்களைக் கொண்ட தேசத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும். இராசரட்டை நாகரிகத்தைச் சேர்ந்த இலக்கிய நூல்களை நோக்குகையில் அவை பாளி, சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதியிருப்பதை அவதானிக்கலாம்.

தீபவம்சம், அடிதானா, பிரதீப்பிக்கா, சாரா பிரதீப்பதி ஆகிய நூல்கள் பாளி நூல்களுக்கான உதாரணங்களாகும். ஜானகிஹரனய, பாலவதபோதன அனுருத்த, சத்தகய என்பன சமஸ்கிருத நூல்களுக்கான உதாரணங்களாகும்.

சமுதாயம் நல்ல முறையில் செயற்படுவதற்கு சமுதாயத்தால் அனுமதிக்கப்பட்ட பொதுவான விதிமுறைகள் மிக முக்கியமாகும். சட்டமாக அமைவது இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகளாகும். இந்த விதிமுறைகள் இரு வகைப்படும். அவைகளில் சில எழுத்து வடிவம் பெற்ற இலக்கியங்கள் ஏனையவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபாகும்.

மிருகங்களை எவரும் கொல்லக் கூடாதெனவும், எருமை, பசு, ஆடு என்பனவற்றைக் கொல்வோருக்கு மரண தண்டனை எனவும், நீர்நிலைகளில் வாழும் உயிரினங்களைக் கொலை செய்யக் கூடாதெனவும் சட்டங்கள் விதிக்கப்பட்டதாக இலக்கியங்கள் கூறுகின்றன. குற்றச்செயல் தொடர்பாகவும் எமது அரசர்கள் கடுமையாகச் செயற்பட்டனர். தண்டனைகளாக விதிக்கப்பட்ட சட்டங்கள் கொலை குற்றத்திற்கு வழங்கப்பட்ட தண்டனை தூக்கிலிடுதலாகும். பிறருக்குச் சொந்தமான மாடுகளை களவு செய்து பிடிபட்டால் அந்த மிருகங்களை தேடி உரியவர்களிடம் ஒப்படைத்து மாடுகளின் உடலில் இடப்பட்ட அடையாளத்தை அவைகளைத் திருடியவர்களின் நெற்றியில் சூடாக்கி இட வேண்டும் என இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைமறைவாக இருக்கும் குற்றவாளிகளைப் பிடிக்கும் பொறுப்பு அக்கிராமத்து மக்களிடம் ஒப்படைக்கப்பட்டது. குற்றவாளிகளை பிடிக்கும் வரை குற்றவாளி வாழ்ந்த கிராம மக்கள் ஒரு வரியை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டி இருந்தது. அது உள்ர் தண்டப்பணம் எனப்பட்டது.

குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் ஏனையோர் படிப்பினையாகக் கொண்டு குற்றங்கள் செய்யாதிருக்கும் பொருட்டே தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இவை எமது சட்டங்களுக்கு பின்னணியாக அமைந்ததாகும். தற்காலத்தில் உரோமன்-டச்சுச் சட்டங்களே இலங்கையில் பின்பற்றப்படுகிறது. இது மிகவும் பிற்பட்ட காலத்திலேயே அறிமுகம் செய்யப்பட்டதாகும்.

இதனை கற்றுக் கொள்வதன் மூலம் நம் தேசத்தில் ஒழுக்கமுள்ள மனிதர்களை உருவாக்க முடியும். முற்காலத்தில் இலங்கைச் சமுதாயம் பெண்களை உயர்வாகக் கருதியதுடன் அவர்களை மதித்து நடந்தது. இலக்கியங்களும் தொல்பொருள் மூலாதாரங்களும் இதனை உறுதி செய்கின்றன. ஆட்சியிலும் பெண்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதிலிருந்து எமது புராதன சமுதாயம் பெண்களுக்கு அளித்த மரியாதையையும் அவர்கள் மீது கொண்ட நம்பிக்கையும் அறியக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகக் கூறின் புராதன காலத்தில் இந்நாட்டில் வாழ்ந்த பெண்கள் கடுமையான சமூகக் கட்டுபாடுகளால் துன்புறவில்லை. அவர்கள் சுதந்திரமாக செயற்படத் தடைகள் இருந்தன என்பதைக் காட்டும் ஆதாரங்கள் எதுவும் இலக்கிய மூலாதாரங்களில் இல்லை. தனது கணவன் தூர நாடொன்றிற்கு வர்த்தகத்தின் பொருட்டு சென்று மூன்று ஆண்டுகளின் பின்னர் திரும்பி வரும் வரை தனியாக வாழ்ந்த ஒரு பெண்ணைப் பற்றி ரசவாஹினி எனப்படும் இலக்கிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் திருமணம் செய்ய வேண்டும் என்பது சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாக இருந்தது. 16 வயதை அடைந்ததும் திருமணம் செய்ய அவள் தகுதியுடையவளாவாள். திருமணம் செய்யும் வயதை அடையும் வரை பெண்கள் தமது பெற்றோரின் பாதுகாப்பிலேயே இருந்தது (இருக்க வேண்டும்) பற்றியும், பிள்ளைக்குக் கல்வியறிவை வழங்குவது பெற்றோரின் கடமையாகும் என்பது பற்றியும் சகஸ்ஸ வத்துப்பகரண என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாலியவின் மனைவி அசோகமாலா துட்டகைமுனு மன்னனின் மனைவியோடு இருக்கும் மாளிகையில் சுவையான உணவு சமைத்து அனைவரதும் மனதைக் கவர்ந்ததாக சத்தர்ம்மாலங்காரவில் விபரிக்கப்பட்டுள்ளது. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் மதுபாச்சிக்கா என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டதாக தம்பியா அட்டுவா கெட்டபத என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச குடும்பங்களில் மட்டுமன்றி சாதாரண சமுதாயத்திலும் பெண்களுக்குத் தலைமைத்துவம் வகிப்பதில் தடைகள் இருக்கவில்லை. முற்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த பெண்கள் தாய்மாராகவும் சகோதரிகளாகவும் சமுதாயத்தினால் மதிக்கப்பட்டனர். அவர்கள் துன்புறுத்தப்பட்டதாக எவ்வித சான்றுகளும் இல்லை. நீண்ட காலம் முதற்கொண்டு எமது மக்கள் பெண்களின் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து வந்தனர்.

இன்றைய சமுதாயத்தில் வாழும் பெண்கள் சுதந்திரமின்றி, பல எதிரிகளுடன் போராடும் கார்காலம் போன்று இருப்பதோடு, தம் மானம் காக்க அவர்கள் இன்று சுதந்திரமன்று வீட்டினுள்ளேயே அடங்கியிருக்கின்றனர். இவ்வாறான துன்பங்களை முற்காலத்தில் வாழ்ந்த பெண்கள் அனுபவிக்கவில்லை. ஏனெனில் அக்காலத்திலிருந்த பெண்கள் ஒரு மதிப்பைப் பெற்றிருக்கும் படி சட்டங்கள் இருந்தன. ஆனால் இன்றைய சமூகத்தில் பெண்களின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட சட்டங்களையும் மீறும் கொடியவர்கள் இந்த இலக்கியங்களை கற்றுக் கொள்வதனால் அவர்கள் நல்லவர்களாக திருத்தலாம். அவ்வாறு திருந்திவிட்டால் பயத்தால் சத்தம் போடும் மக்களிடையே ஓர் அமைதி நிலவும். இதனால் அமைதியான மனிதர்களைக் கொண்ட தேசத்தை எம்மால் கட்டியெழுப்ப முடியும்.

பல்வகைப்பட்ட கைத்தொழில்களில் ஈடுபட்டவர்களும் கலைத்துவமான தொழில்களில் ஈடுபட்டவர்களும் புராதன சமூகத்திலும் வாழ்ந்து வந்தனர். கலைஞர்களில் நடனமாடுவோர், சித்திரம் வரைபவர்கள், கவிஞர்கள் பற்றிய விடயங்கள் புராதன மூலாதாரங்களில் காணப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்தில் மெதகமவில் அமைந்துள்ள புராதன விகாரையில் இற்றைக்கு 2200 வருடங்களுக்கு முன்னர் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் திஸ்ஸ என்ற நடனக் கலைஞர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது மனைவி பருமக பதவி வகிப்பவராக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை முக்கியமான ஒரு விடயமாகும். நடனத் தொழில் (நடனக்கலை) சமூகத்தில் முக்கியமான இடத்தை வகித்து வந்தது அதிலிருந்து நாம் அறியலாம்.

சித்திரக் கலைஞர்களாகக் குறிப்பிட "சிதகர" என்ற சொல்லும் "லபன" எனும் சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது சொல் "சித்திரகார" எனும் சொல்லாலும் ஆக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருதத்தில் "லேபத" எனும் சொல்லாலும் ஆக்கப்பட்டுள்ளன. சமஸ்கிருதத்தில் லேபத எனும் சொல் பயன்படுத்தப்படுவது அலங்காரப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காகும். நிறங்களைப் பூசுவதன் மூலம் சித்திரக்கலை உருவாக்குவதனால் சித்திரக் கலைஞர்களைக் குறிக்க "லேபத" எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த நெட்டுகந்த எனுமிடத்தில் உள்ள கல்வெட்டில் லபன திஸ்ஸ என்பவரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது நாட்டில் உன்னத படைப்பாளிகளாக கவிஞர்கள் காணப்பட்டனர். அவர்களைக் குறிப்பதற்கு கவி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கவிதை ஒன்று கிரிந்த பன்சலையிலுள்ள கற்பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது. அது தாளத்துடன் பாடக்கூடிய பாடல் ஒன்றாகும். இது ஒரு கவிதை ஆகும். அது புத்த பெருமானின் குணவியல்புகளைப் பறைசாற்றுவதுடன், அவ்வாறான சமயத்தை நாக இளவரசன் இங்கு வைத்து ஏற்றுக் கொண்டதாக கூறுகின்றது.

அநுராதபுரத்தில் எழுதப்பட்ட அறுநூறுக்கு மேற்பட்ட கவிதைகளை இன்றும் சீகிரிய பளிங்குச்சுவரில் காணக்கூடியதாக உள்ளது. அக் கவிதைகளின் இரசனை மிகவும் உயர்வானதாகும். புராதன காலத்தில் எங்கள் நாட்டில் வாழ்ந்த கவிஞர்கள் புத்த சமய போதனைகளை பெற்ற உணர்வினாலும் இயற்கையோடு இணைந்து தொடராகச் செயற்படும் பண்பினாலும் ஏற்பட்ட அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு கவிதைகளை படைப்பதில் ஈடுபட்டனர். ஆகையால் உலகின் நிலையாமை இக்கவிதைகளுக்கு பெருமளவிற்கு கருப்பொருளாகக் கையாளப்பட்டுள்ளது. அநுராதபுரத்தில் அபயகிரி விகாரையின் சுற்றாடலில் கண்டறியப்பட்டுள்ள கி.பி 9ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் அவ்வாறான உள்ளத்தைக் கவரும் கவிதை ஒன்று எழுதப்பட்டுள்ளது. அக்கவிதையில் எழுதப்பட்டுள்ள உவமானங்கள் மிகவும் எளிமையான உணர்வு பூர்வமான அழகியல் உணர்வை கேட்போருக்கு ஏற்படுத்தும் தன்மை வாய்ந்தவை ஆகும்.

அநுராதபுரம், பொலநறுவை காலங்களில் கண்டெடுக்கப்பட்ட கட்டட நிர்மாணக் கலைக்குரிய நிர்மாணங்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம். பௌத்த சமயக் கட்டடங்களாவன தூபி, தூபி மனை, சிலைமனை, விகாரைகள், ஆராமைகள், தான சாலைகள், தியான மண்டபங்கள், அரச மாளிகை, கோட்டைகள், மருத்துவ நிலையங்கள்

கட்டடங்கள் கட்டுவது மிகப் பண்டைய காலந்தொட்டு இந்நாட்டில் வளர்ச்சியடைந்து வந்ததொரு கலையாகும். புராதன காலத்தில் மக்களுடைய சுகநல விடயங்களிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்காக முறையான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் சூழல் தொடர்பாக எவ்வளவு கவனம் செலுத்தினர் என்றால் மலசல கூடங்களில் இருந்து வெளியேறும் அசுத்த நீரை அப்படியே பூமியில் விட்டுவிடாது சுத்தமாக்கி வெளியேற்றுவதற்காக நிலத்தினுள்ளே வடிகட்டும் பாரிய பானைகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வடிகட்டும் பொருட்களை அதனுள் இட்டு வைத்திருந்தனர். ஆராமைத் தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த மலசலகூட இருக்கைக் கற்களின் மீது அலங்கார செதுக்கல் வேலைகளையும் செய்திருந்தனர். இதன் மூலமும் புராதன மக்களின் கட்டடக் கலையாற்றல் வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் கலை நிர்மாணங்களில் சிலை வடித்தல் முக்கியமான இடத்தை வகித்தது. அதில் கணித அளவீட்டு முறைகளில் கவனம் செலுத்தப்பட்டு கலையம்சத்துடன் கூடிய புத்தரினதும் அரசர்களினதும் வேறு சிலைகளும் உருவாக்கப்பட்டன.

இலங்கையின் செதுக்கல் கலையும் சிற்பம் வடிக்கும் கலையும் இந்தியச் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தாலும் காலப்போக்கில் இந்நாட்டிற்கே உரிய தனித்துவம் பண்புகளைக் கொண்டு அக்கலைகள் வளர்ச்சியுற்றன. அவ்வாறான சிறந்த கலைப் படைப்பாக சந்திரவட்டக்கல்லைக் குறிப்பிடலாம். சந்திர வட்டக்கல் என்பது கட்டிடத்தினுள் நுழைகின்ற வாயிலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரைச்சந்திரனின் வடிவைக் கொண்ட கற் செதுக்கலாகும். ஆரம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் செதுக்கல்களைக் கொண்டதாக இக்கற்றுண்டும் பிற்காலத்தில் செதுக்கல்களால் அழகுப்படுத்தப்பட்டுள்ளது. செதுக்கப்பட்டுள்ளன. அதன் மத்தியில் மலர்ந்த தாமரைப் பூவின் ஒரு பகுதி காணப்படுவதோடு அதைச் சுற்றி சிறிய மலர்க் கொடியிலான வட்டமும் தாமரை மெட்டுக்களுடன் கூடிய அன்னப் பட்சிகளின் வரிசை ஒன்றும் சிங்கம், யானை, குதிரை, எருது எனும் மிருக வரிசையும் முடிவில் தீச்சுவாலை அல்லது பூவிதழ் அலங்காரமும் காணப்படுகின்றன. அநுராதபுர காலத்திற்குரிய கலைத்துவம் மிக்க சந்திரவட்டக் கற்கள் இரண்டு அபயகிரி விகாரை வளவில் காணக்கூடியதாகவுள்ளது.

பொலநறுவைக் காலத்தில் இருந்து சமயச் செல்வாக்குக் காரணமாக சந்திரவட்டக் கல்லில் இருந்து எருதுவின் உருவம் நீக்கப்பட்டது. மேலும் மனங்கவர் சந்திரவட்டக்கல், காவற்கல், கொரவக்கல் ஏனைய வாயில் படிவரிசை சார்ந்த கலையாக்கங்கள் பல ஒன்று சேர்ந்து இராசரட்டை கால கட்டிடங்களின் வாயில்களை அலங்கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இசுறுமுனிய காதலர் சிலை, குதிரை தலையும் மனித உருவமும் கொண்ட செதுக்கல் கலை வடிவங்கள் உயர் கலைத்திறன் மிக்க படைப்புகளாகக் கருதப்பட்டவையாகும்.

இந்நாட்டில் பாறைகளும் உலோகங்களும் பயன்படுத்தப்பட்டு பௌத்த, இந்து சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அநுராதபுரத்தில் கல்லில் செதுக்கப்பட்ட புத்தர் சிலைகள் அபயகிரி ஜேதவன விஹாரைகளில் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உலோகத்தால் உருவாக்கப்பட்ட வெஹரகல, அவலோகிதேஸ்வர போதிசத்துவ உருவச் சிலையும் பதுளை உலோக புத்தர் சிலையும் அக்காலத்திற்குரிய மிகச் சிறந்த கலைப் படைப்புக்களாகும். பொலநறுவைக் காலத்தில் இருந்து கோட்பாடுகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட சிவன், நடராஜர், பார்வதி, சூரியன் ஆகிய கடவுள்களின் உலோகச் சிலைகள் காணப்படுகின்றன.

கம்பளை கோட்டை இராச்சிய காலங்களில் நிலவிய கட்டிடக்கலை முறை கண்டி இராச்சிய காலத்திலும் தொடர்ந்து பேணப்பட்டு வந்தது. அங்கு கட்டப்பட்ட கட்டடங்களுள் சமய ரீதியான கட்டடங்கள் முக்கியத்துவம் பெற்றன. தலதா மாளிகை, எம்பக்க தேவாலயம், லங்காதிலக விகாரை, இந்துக் கோவில்கள் என்பன இவற்றுள் குறிப்பிடத்தக்கவை ஆகும். கண்டி இராச்சிய காலத்தில் தூண்களின் மீது விகாரைகள் அமைக்கப்படும் மரபு ஒன்று இருந்து வந்தது. நிலத்தின் மீது மரத்தூண்களை நட்டு அதன் மீது கட்டிடத்தை கட்டுவர். அவ்வாறமைக்கப்படும் விகாரைகள் டெம்பிட்ட விகாரை எனப்படும் கறையான் போன்றவை மரத் தூண்களை பொருத்தி டெம்பிட்ட விகாரை கட்டப்பட்டது. மெதவலையில் இன்றும் இது போன்ற விகாரை ஒன்று உள்ளது.

கண்டி இராச்சிய காலத்திற்குரிய விகாரைகளின் சுவரோவியங்கள், மரச் செதுக்கல்கள், சிலைகள் என்பன மூலம் அக்காலத்தில் நிலவிய கலைத் திறன்கள் பற்றி விளங்கிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது.

கண்டி இராச்சிய காலத்தில் வெலிவிட்ட ஸ்ரீ சங்கராஜ தேரரால் ஏற்படுத்தப்பட்ட மறுமலர்ச்சியால் பௌத்த சமயத்தின் பண்பை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஊடகமாக ஓவியக்கலை கையாளப்பட்டுள்ளது. அக்கால ஓவியக்கலையானது பல்வேறு சிறப்புக்களுடனும், பண்புகளுடனும் காணப்பட்டன. அவையாவன கற்றோர், கல்லாதோர் ஆகிய அனைவராலும் புரிந்துக் கொள்ளக் கூடிய வகையில் ஓவியங்கள் வரையப்பட்டமை. சுவர்களைப் பகுதிபகுதியாகப் பிரித்து நீண்ட கதைகளைப் படிமுறையாக முன் வைக்கும் ஓவியங்கள் வரையப்பட்டமை ஒவ்வொரு ஓவியச் சட்டகத்தின் கீழும் கதையம்சங்கள் சுருக்கமாகப் பெயரிட்டுள்ளமை, வெற்றிடங்களை நிரப்புவதற்கு மலர்கள் வரையப்பட்டுள்ளமை, மனிதர்கள், பிராணிகள், தாவரங்கள் ஆகிய உருவங்களில் சரியான அளவீடு பேணப்படாமை, தாவரங்கள் கனியங்கள் ஆகியவற்றிலிருந்து நிறங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையும் சிவப்பு நிறத்தை அதிகளவில் பயன்படுத்தியிருந்தமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடியதாயிருத்தல். வெஸ்ஸந்தர, தேலபத்த, தஹம்பொத ஆகிய நூல்களில் இருந்து பெறப்பட்ட ஜாதகக் கதைகளை ஓவியங்களாக வரைந்திருந்தமை. இன்றும் தம்புள்ள, தெகல்தொருவ, தலதாமாளிகை, முல்கிரிகல ஆகிய இடங்களில் கண்டிக் கால ஓவியங்களைப் பார்வையிடக் கூடியதாகவுள்ளது.

கட்டிடக்கலை, ஓவியக் கலையுடன் பூங்கா அலங்காரமும் பற்றி எமது பண்டைய சமூகத்தினர் சிறந்த அறிவைப் பெற்றிருந்தனர். அதற்கு சிறந்த உதாரணம் சீகிரியா நகர நிர்மாணமும் அங்கு காணப்பட்ட பூங்காக்களும் ஆகும்.

சீகிரியா மலைக்குன்றின் மேற்கே உள்ள சிதைவுகள் நீர்ப்பூங்காவிற்கு உரியதாகும். சமாந்தர திட்டமிடலுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ள பூங்காவின் ஒரு பக்கத்தில் காணப்படும் அம்சங்கள் எதிர்பக்கத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவிற்கு மேற்குப் பக்கத்தில் (அந்தத்தில்) அமைக்கப்பட்டுள்ள பகுதியே நீர்ப்பூங்காவாகும். சீகிரியா நந்தவனத்தின் மேற்கு திசை முழுமையாகவும் நீர்ப்பூங்கா எனப்படுவதற்கான காரணம் அங்கு நீர்த் தடாகங்கள், நீர்க்கால்வாய்கள், கணகவர் நீர்ப்பூங்காக்கள் என்பன அமைக்கப்பட்டிருந்தமையாகும். இவை கலையின் அம்சங்களாகும்.

கலைகளில் சித்திரக் கலையே மறுமலர்ச்சிக் காலத்தில் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியது. இத்தாலியில் புளோரன்ஸ் நகரில் புதிய சித்திரக்கலைகளை உருவாக்கிய மத்திய நிலையம் ஒன்று உள்ளது. (இருந்தது) உலகியல் இரசனையின் பொருட்டு இயற்கைக்கு முதலிடமளித்து சித்திரம்,சிற்பம் என்பன நிர்மாணிக்கப்பட்டன. அதுவரை சமயம் சார்பாக முக்கிய இடம் வகித்த இயேசுநாதர், கன்னிமரியாள் என்போரின் உருவங்கள் வரையப்பட்டன. எனினும் மறுமலர்ச்சிக் காலத்தில் செல்வந்தர்களின் உருவங்கள் சித்திரமாக வரையப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இக்காலத்தில் இருந்த சித்திரக் கலைஞர்களுள் லியானாடோ டாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, ரபாயல், மெசெக்ஷியோ, பொட்டி ஷெல்லி என்போர் முக்கியமானவர்களாவர்.

லியானாடோ டாவின்சி சித்திரக் கலைஞராக மட்டுமன்றி வேறுபல துறைகளிலும் சிறந்து விளங்கினார். அவர் கவிஞராகவும் பாடகராகவும் விஞ்ஞானியாகவும் பொறியியலாளராகவும் இருந்தார். அவரது கலைப் படைப்புகளான மோனாலீசா, இயேசுநாதரின் இறுதி இராப்போசனம் போன்ற சித்திரங்கள் இன்றும் உலகப்புகழ் பெற்றவையாக திகழ்கின்றன.

மைக்கல் ஆஞ்சலோவும் அக்காலத்திலிருந்த சிறந்த சித்திரக் கலைஞராவார். அவர் சிற்பக் கலையிலும் சிறந்து விளங்கினார். சிஸ்டைன் ஆலயத்தின் பாவுகையில் அவரால் வரையப்பட்ட சித்திரங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இறுதி தீர்ப்பு, சிஸ்டைன் ஆலயத்தில் ஆதாமின் சித்திரம் என்பன அவர் படைப்புக்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

சிற்பக் கலையும் மறுமலர்ச்சிக் காலத்தில் சிறப்பிடம் பெற்றது. பளிங்குக் கற்களில் சிற்பங்கள் செய்தல் இக்காலத்தில் காணப்பட்ட சிறப்பம்சமாகும். மைக்கல் ஆஞ்சலோ மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்த சிறந்த சிற்பக் கலைஞராவார். மெடிசி குடும்பத்தில் லோரேன்சோ மெடிசின் குடும்பத்தின் மெடிசியின் உருவத்தை இவர் பளிங்குக் கல்லில் வடிவமைத்தார். பியெட்டா, மோயிசன், தாவீது போன்ற உருவச் சிலைகள் இவரது படைப்பில் சிறப்பிடம் பெறுகின்றன.

மறுமலர்ச்சிக் காலத்தில் கட்டட கலையிலும் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. மத்திய காலத்தில் நுனிக் கோபுரங்கள், வில்வளையக்கூரை, பிரமிட் வடிவிலான தூண்கள் என்பன கட்டடக் கலையின் சிறப்பம்சங்களாக விளங்கின. அதற்குப் பதிலாக மறுமலர்ச்சிக் காலத்தில் உரோம கட்டடக் கலைக்கு அமைய வட்ட வடிவிலான வில்வளையம், உயர்ந்த தூண், அரைவட்ட சிகரம் என்பன கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமர்களைப் பின்பற்றி இக்காலத்தில் சொகுசான மாளிகைகளும் அமைக்கப்பட்டன. மறுமலர்ச்சிக் காலக் கட்டடக் கலையின் சிறப்பினை எடுத்துக் காட்டும் கட்டடங்களாகப் புனித பேதுருவின் பெசிலிக்காகவும் (ஆலயம்), புளோரன்ஸ்சிலுள்ள பேராலயமும் விளங்கின. பிரமத்தே, மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோ டாவின்சி, ரபாயல் ஆகியோர் மறுமலர்ச்சிக் காலத்தில் இருந்த சிறந்த கட்டட கலைஞர்களாவர்.

அன்றைய காலத்தில் கலையின் சிறப்பிடம் பலரிடம் குடி கொண்டிருந்தது. அதை அவர்கள் இவ்வுலகிற்கு வெளிகாட்டினார்கள். கலையினால் இவர்களின் புகழ் அன்றும் இன்றும் என்றும் பேசப்படுகின்றன. பேசப்படும் இன்றைய தற்கால மக்கள் தங்களிடம் உள்ள கலையாற்றலை இவ்வுலகிற்கு வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர். இவர்களும் இதனை (கலை) வெளிப்படுத்துவார்கள் என்றால் அவர்களின் உள்ளம் அமைதி பெற்று கலைகளின் ஆழ்ந்த கவரும் கவர்ச்சியால் தீய குணங்களிலிருந்து விடுபட்டு ஒழுக்கமுள்ள சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தெய்வம் உணவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகை இ

அவ்வகை பிறவும் கருவென மொழிவ,

இவ்வாறே பண்பாட்டின் கொள்கைகளும் இலட்சியங்களும் எல்லாக் காலத்து இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை. ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது என்றே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர் ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாட்டு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை பிற சமயங்களை போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறிஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வலுப் பெற்றன. வட மொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமனுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்களில் வட மொழியில் இடம் பெற்றன. சுநீதிகுமார், சட்டர்ஜி, இந்திய பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு- திராவிட பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளனர். சமணரியற்றிய சிலப்பதிகாரத்தையும், புத்தரியற்றிய மணிமேகலையும், விரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமறுப்புலவர் இயற்றிய சீறாப் புராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளரென்பதும் புலனாகின்றது.

அக்காலத்தில் தமிழ் நாட்டின் பட்டையும், மிளகையும், முத்தையும் இன்னும் பல பொருள்களையும் உலகம் விரும்பியுள்ளது. இது பண்டைக் காலம் தொடங்கி தமிழ் மக்கள் மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும் இந்தியாவின் வட பாகத்தோடும் வணிகத் தொடர்பைக் கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. அத்தோடு தமிழ் நாட்டின் புவியியல் அமைப்பு அதனை பண்டமாற்றத்திற்கு ஏற்ற இடமாக அமைந்துள்ளது. கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்ல வேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ் நாட்டில் இறக்கப்பட்டு (இறக்கப் பெற்று) வேறு மரங்கலங்களில் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. மேற்றிசை நூல்களே சங்க இலக்கியத்தைப் போல் இவ்வணிகத்துக்குச் சென்று தருகின்றன. எனவே, இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் வாதிகள் உரோமப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலகை மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியுள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் யாதனும் நாடாமல் ஊராமல் என்றும் கூறுவதற்கு இம் மனப்பான்மை ஊக்கமளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பண்பாட்டில் பக்தி எங்ஙனம் சிறந்து விளங்கியதோ நீதியும் அவ்வாறு சிறந்து விளங்கியது. பாரதியாரின் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்ற தமிழ்நாடு" என்னும் கூற்றைச் சிந்திக்கும் பொழுதெல்லாம் அதன் உண்மையை உணர முடிகின்றது. உலக நீதி இலக்கியங்களை சிறப்பாக ஆராய்ந்து அரும்பெரும் நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் என்னும் மகாத்மா திருக்குறளைப் பற்றி எழுதும் போது திருக்குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுகளை கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது என்று குறிப்பிட்டுள்ளார். திருக்குறளை அவர் ஜெர்மன் மொழிப் பெயர்ப்பில் படித்தார். தமிழ் மொழியில் அதனைப் படித்திருந்தால் இன்னும் பன்மடங்கு அதிகமாக அதன் புலைமையை உணர்ந்திருப்பார். திருக்குறளுக்குப் பின் தோன்றிய ஏனைய நூல்களைப் பற்றி நான் குறிப்பிட வேண்டியதில்லை. தமிழை முதற்கற்ற மேனாட்டார் அனைவரும் நம் நீதி நூல்களையே முதலில் மொழி பெயர்த்துத் தமிழ் வாழ்க்கையுடைய மக்கள் (தமிழ் மக்கள்) ஞானத்தைப் போற்றினார்கள். ஒழுக்கமென்பது தமிழர் பண்பாட்டின் ஓர் அடிப்படையாகக் கொள்கை அமைந்து இன்றும் தமிழ் வாழ்க்கைக்குப் பெரும் அழகையும் மன நிறைவையும் நல்குகின்றது. தமிழ் மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாகத் தனி நாடுகளில் வாழ்ந்து செழித்தோங்குவதற்கும் அரசியல் வாழ்க்கைக்கும், இவ்வொழுக்கமே துணையாக அமைந்தது. எனவே தான் போப்பையர் இத்துணை நீதிநூல்களை இயற்றிய மக்களுக்குக் கடவுளின் சிறப்பாக அருள் இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு போன்ற இலக்கியங்கள் மட்டுமல்லாது கலைகளும் போன்றன இணைந்து ஒரு மனிதரை சிறந்தனவாக மாற்றுவதை விட ஒரு தேசத்தில் வாழும் சமுதாயத்திலுள்ள அனைத்து மனிதர்களையுமே சிறப்புடையவர்களாக மாற்றுகின்றது.

இலக்கியங்கள் மற்றும் கலைகள் மனிதர்களிடையே பரவட்டும், அமைதியான, ஒழுக்கமான, ஒன்று கூடி வாழக்கூடிய இந்த மனிதரைக் கொண்ட (சிறந்த மனிதர்களைக் கொண்ட) தேசத்தைக் கட்டியெழுப்ப இலக்கியங்களும் மற்றும் கலைகளும் அமையட்டும் மனித வாழ்க்கையின் அங்கமாகக் கடைசிவரை..............................

**ஆக்கம்**

**வி.ஹரிஸ்மிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## මරක්කල මානගේ නිරන්ජන් ධනුෂ්ක
## අවු 18 ට වැඩි - ගීත රචනා තරගය
## "සාහිත්‍ය තේමා ගීතය"

හෙළ සිහලේ සාහිත වරුනේ
බස රැස නිසි හෙළි කරලූ
අභිමානයේ හඩ ඝෝෂා රැන්දූ
සිහල කලා කරුවෝ ............... //

කව් සිළුමිණ සසදාවත් මුව දෙව්දාවත්
යහමින් සාහිත රස මුසු කරවා
හෙළ සාහිත කිරුළ මුදුනේ තබමින්
වැජඹුනි හෙළ සාහිත ධරයන්

පරෙවි ගිරා සැළලිහිණි කොවුල් සදෙස්
පන්හිඳ පිටපත් කරවූ මහ යතිවරයාණෝ
නමදිමි හද බැතියෙන් අපි සැම
හෙළ සාහිත රස මිහිරින් විඳිමින්

ලොවට උතුම් සම්මා සම්බුදු වූ
අප මහ මුනිදුන් ගුණ රැස නිසියෙන්
අමා වතුර පැන් ගෙන සිසිලෙන් නහැවූ
සාහිත ධරයනි ඔබ හට ජය තුති පුදමි උතුම්

රාහුල හිමි වීදාගම යතිවරු සැම දෙන
හෙළ සාහිත රස ගන්වා
සොඳුරු කලා බිහි කෙරුවා
කලා කෙතට මග හෙළි කෙරුවා

සාහිත ධරයෙනි නුඹ හට ජය තුති වේවා
නගනෙමි අප සැම බැති පෙමිනා ........................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் நீயே என் தாயாய்......

கருக்கொண்டு உதரத்தில் உதித்த என்னை
உருக்கொடுத்து உதிரம் தந்த தெய்வமிவள்
அருமருந்தாய் தாய்ப்பாலை பருகிடத் தந்து
விருப்போடு என்னை ஆதரவாய் வளர்த்த அன்னையிவள்.

பஞ்சிலும் மென்மையாய் பிஞ்சு என்னைத் தாங்கி
நெஞ்சிலே சுமந்து மிஞ்சிடும் அன்பால் அரவணைத்தவள்
அஞ்சி நின்ற போதெல்லாம் தட்டிக் கொடுத்து
கொஞ்சிப்பேசி அடைக்கலம் தந்த பிறவியிவள்.

உயர்வாய் நான் கல்வியில் முன்னேற உதவிபுரிந்து
தயவாய் தன்நம்பிக்கை ஊட்டி நம்பிக்கை கொடுத்தவள்.
முயற்ச்சியே வாழ்க்கையின் முதற்படி என உரைத்து
பயமின்றி நான் வாழ அயராது உழைத்தவள்.

விண்ணகத்து வெண்ணிலவாய் நான் ஒளிர்ந்து வெளிச்சம்தர
கண்ணுக்குள் பொத்தி வைத்து என்னை காத்தவள்
உண்ண உணவழித்து என் பசி போக்கி
வண்ணமாய் வாழ்வு உயர பாடுபட்ட உத்தமியிவள்.

அறிவுதனை ஆர்வமாய் அன்போடு எனக்களித்து
நெறிமுறை தவறாது வாழ்வதே வாழவு எனக் கற்றுத்தந்தவள்
குறிப்பறிந்து இல்லாதோர்க்கு பொருள் ஈர்ந்து
வறியவர்க்கும் உதவிட வேண்டுமென உரைத்த உண்மையிவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி அனைத்து ஆறுதல் அளித்து – நான்
துள்ளி விளையாடும் அழகினை கண்டு இரசித்தவள்
பள்ளி சென்று என் படிப்பினை நிலையாய் தொடர
வெள்ளி நிலவாய் வெளிச்சம் தந்த தீபமிவள்

தன்னம்பிக்கை ஊட்டி தயவாய் வளர்த்தவள்
என்னை ஈன்றெடுத்த இனிய சொந்தமவள்
மின்னிடும் நட்சத்திரமாய் நாளும் ஒளிர்பவள்
பின்னேவரும் பிறப்பிற்கும் தாயாய் வருபவள்

ஒழுக்கத்தில் சிறந்து விளங்கி நான் வாழ
பழக்கவழக்கங்கள் நல்லனவற்றை நாளும் ஊட்டியவள்
குழப்பங்கள் வரும் போது மனதை திடப்படுத்தி
எழுகின்ற இடர்தனை சமாளிக்க கற்றுத் தந்தவள்

நோய் வந்து எனை வாட்டி நான் துவண்ட போதெல்லாம்
தேயாத நிலவாய் தாதி போல பணிவிடை செய்தவள்
சேயாய் மண்ணில் நான் உதிக்க – என்
தாயாய் வந்து வரம் அளித்த பௌர்ணமியிவள்

விலைமதிப்பில்லா அன்பினை நாளும் சொரிந்து
கலையாத கனவாய் என் நெஞ்சமதில் நிறைந்தவள்
சிலையாக என் இதயத்தில் இடம் பிடித்து
நிலையான உறவாய் எனக்காக கிடைத்த தாயவள்

தரத்திலே உயர்ந்து பாசத்தின் உறைவிடமாய்
வரம் போல எனக்கமைந்த அழகு மங்கை இவள்
கரம் கொண்டு அணைத்திடும் நிலையான உறவாக
நிரந்தரமாய் இறைவன் எனக்களித்த சொந்தம் இவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டுசெல்லும் உறவாய் பந்தம் தொடர்ந்திடவே

வேண்டித் தொழுகின்றேன் நாளும் கடவுளிடம் அன்னைக்காய்

மாண்டு போன பின்னும் வந்திடும் ஒவ்வொரு பிறவியிலும்

மீண்டும் மீண்டும் என் தாயின் அன்பு வயிற்றில் பிறந்திட வேண்டுமே.......

**திருமதி. சுஜந்தினி யுவராஜா.**
**உப்புவெளி**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகர்ண கலா வாரதி சிறப்பு கௌரவம் பெறும் பட்டணமும் சூழலும் பிரதேச மூத்த கலைஞர்கள்



திருமதி எல்.எச்.டி.குசுமாவதி
Samasri Desha Keerthi
L.H.D. Kusumawathi J.P



திரு. இராசமணி
சுப்பிரமணியம்



திரு. சின்னத்தம்பி
நாகூர்நீதர்

## கிழக்கு மாகண வித்தகர் விருது



திரு.கனகசபை
தேவகடாசம்

## கிழக்கு மாகண கலாபூசண விருது



திரு.நடராஜா
மகேந்திரன்

## கிழக்கு மாகண இளங்கலைஞர் விருது



திரு.நிரஞ்சன் தனுஸ்கன்



திருமதி.திருக்குமரன் கௌதமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தமிழர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் கலைஞர்களுக்கான அரச விருது வழங்கப்பட்ட எமது பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தை சேர்ந்தவர்களை வாழ்த்துவோம்**

**கலை இளவரசன்**



திரு. புவனேந்திரன்
கோபிநாத்

**கலை இளவரசி**



செல்வி. ரத்னசிறி
சஞுசுமாலி

**கலை இளவரசி**



செல்வி இராசரட்ணம்
பிரபாலினி

**கலைச்சுடர்**



திருமதி ரேணுகாதேவி
செல்வபுத்திரன்

**கலைச்சுடர்**



திரு. சின்னராசா
காண்டீபன்

**கலைச்சுடர்**



திருமதி கலைமகள்
சக்தீபன்

**கலைமணி**



திரு. தேவசகாயம்
சேவியர்

**கலைமணி**



திரு. செல்வராசா
விபுலசேகரம்

**கலைமணி**



திரு. பேரம்பலம்
கனகரத்தினம்

**கலைமணி**



திருமதி சாரதாதேவி
ஸ்ரீஸ்கந்தராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசமட்ட இலக்கிய போட்டியில் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் - ௨0௧௯ /Divisional level Competition winners - 2019

பாலர் பிரிவு -கையெழுத்து போட்டி




அ.கனிதா | சு.லக்ஷிகா | சு.சஜெந்திகா

சிறுவர் பிரிவு -கையெழுத்து போட்டி




மு.உ.பாத்திமா ஹனான் | தி.ரசிகன் | வ.துவாரகா

சிறுவர் பிரிவு -கவிதை பாடல் போட்டி




பா.லோகிதா | ரா.ஹருண்யா | அ.ஸஸ்விதா

கனிஸ்ட பிரிவு -கட்டுரைப் போட்டி




வி.ஹரீஸ்மிதா | பி.ஷப்திக்கா | சு.கோபிஷா

கனிஸ்ட பிரிவு -கவிதை எழுதுதல் போட்டி




த.சுரபிகா | ஹ.மதுஸ்னவி | சி.கம்ஷிகா

கனிஸ்ட பிரிவு -கவிதைப் பாடல் போட்டி




யோ கரிஷாலினி | ஜெ. லத்திக்கா | மு.லவீனா | ம.அம்சிதா

சிரேஸ்ட பிரிவு -கட்டுரைப் போட்டி




வ.விதுஷாலினி | கு.ஜீவமலர் | ர.லக்ஷிகா

சிரேஸ்ட பிரிவு -சிறுகதை போட்டி




மோ. பௌத்திரா | பா. திருக்ஷிகா | ஷி.தானியா

சிரேஸ்ட பிரிவு
நாடக பிரதி எழுதுதல்




பா.சினேகா | அ.தமிகா

சிரேஸ்ட பிரிவு
பாடல் நயத்தல் போட்டி




ச.ஹரீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ප්‍රාදේශීය දිස්ත්‍රික් හා ජාතික සාහිත්‍ය උත්සවය - 2019 / Divisional level Competition winners - 2019

## ප්‍රාථමික අංශය - අත් අකුරු තරගය


1 පිහිපා මහිරංගි


2 සෙලිනි දුලේකා


3 උපේක්ෂා පුජනි ජයරත්න

## පශ්චාත් ප්‍රාථමික අංශය පද්‍ය ගායනා තරගය


1 නෙතුකි සහන්සා


2 නිර්මාණි සුහර්නා ජයසේකර


3 රිද්මි සංසලා සත්සරණි

## පශ්චාත් ප්‍රාථමික අංශය අත් අකුරු තරගය


1 හරින්දි කෞෂල්‍යා දනන්සූරිය


2 සිතුමි ගයේෂා


3 රිද්මි සංසලා සත්සරණි

## කණිෂ්ඨ අංශය ගද්‍ය රචනා තරගය


1 ධනංජලී මධුෂිකා ශෂිමාලා


2 කවීෂා උදානි රංගධාරා


3 හිෂඳි කේෂරා ප්‍රනාන්දු

## කණිෂ්ඨ අංශය ගද්‍ය රචනා තරගය


1 කාවින්ද්‍යා දෙ-විමිනි


2 ධනංජලී මධුෂිකා ශෂිමාලි

## කණිෂ්ඨ අංශය පද්‍ය ගායනා තරගය


1 සදලි තරුෂිකා


2 තරුෂි ධනංජනා


3 කාව්‍යා නිමාශිනි

## ජ්‍යෙෂ්ඨ අංශය මහාවංශය ඇසුරෙන් ගද්‍ය රචනා


1 අගමිණි නිසයුරා


2 චාමර ධනංජන

## ජ්‍යෙෂ්ඨ අංශය ගී රසවින්දන තරගය


1 සදුනි මෙත්සලා

## ජ්‍යෙෂ්ඨ අංශය පද්‍ය රචනා තරගය සදැස්


1 පවනි කවීෂා ද සිල්වා

## ජ්‍යෙෂ්ඨ අංශය පද්‍ය රචනා තරගය නිසදැස්


1 ලෙලුමි පායලි බණ්ඩාර


2 සචිනි නුවාංජනා ද සිල්වා

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Divisional District National Literary Festival 2019 District Secretariat Office : Trincomalee, Medium : English

## Primary section: Hand Writing Competition



M.Hirushikka
U.S. Umedha Kalpani
U.Shabish Shangar

## Post-Primary section: Recitation Competition



S.Agarsha
G.Khashini
V.Sanjana

## Post-Primary section: Hand writing Competition



M.Agansha
T.Yayani
P.G.Prabashwara

## Junior section: Prose Competition



V.Thulaswini
P.Meurika
S.Jathushika
V.Mervisha

## Junior section: Poetic(verse)Competition



U.Juvaishika
B.Tejasvi

## Junior section: Recitation Competition



S.Jathurshika
K.Gruthika
K.Geethanjally

## Senior section: Poetry Writing Competition



R.Kavithanjaly

## Junior section: Songs Competition



J.Jakshigan
R.Kavithanjaly
K.Sinthurini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ප්‍රාදේශීය දිස්ත්‍රික් හා ජාතික සාහිත්‍ය උත්සවය - 2019 / Divisional level Competition winners - 2019

## ළමා කතන්දර නිර්මාණ තරගය


1 ඉනෝකා ලසන්ති ෆොන්සේකා


2 ශශිනි මහේෂිකා ලක්මාලි

## විශ්වකෝෂ / ශබ්දකෝෂ ශාස්ත්‍රීය ලිපි තරගය


1 නිරන්ජන් ධනුෂ්ක


2 ශශිනි මහේෂිකා ලක්මාලි

## පද්‍ය රචනා තරගය - සඳැස්


1 නිලන්ත ප්‍රදීප් කුමාර


2 ඉනෝකා ලසන්ති ෆොන්සේකා


3 ශශිනි මහේෂිකා ලක්මාලි

## සාහිත්‍ය විචාර තරගය


1 ශශිනි මහේෂිකා ලක්මාලි

## පද්‍ය රචනා තරගය - නිසඳැස්


1 නිරන්ජන් ධනුෂ්ක

## ගීත රචනා තරගය


1 නිරන්ජන් ධනුෂ්ක


2 ඉනෝකා ලසන්ති ෆොන්සේකා


3 ශශිනි මහේෂිකා ලක්මාලි

## කෙටි කතා නිර්මාණ තරගය


1 නිරන්ජන් ධනුෂ්ක


2 ඉනෝකා ලසන්ති ෆොන්සේකා


3 නිලන්ත ප්‍රදීප් කුමාර

## சிறுகதைப் போட்டி


1 திரு.சுந்தரலிங்கம் சிவசங்கரன்

## விமர்சனம் எழுதுதல் போட்டி


1 திருமதி.ரிஸ்வான் சிவரமனி

## பாடல் ஆக்கப் போட்டி


1 திருமதி. சுஜேந்தினிதேவி யுவராஜா


2 திருமதி. ரெஜிஜனகன் சத்தியரூபி


3 திரு. இரெத்தினராசா ரெஜிஜனகன்

## சிறுவர் கதைப் போட்டி


1 செல்வி. அருணாசலம் பரமேஸ்வரி


2 திருமதி. ரிஸ்வான் சிவரமனி

## நாடகப் பிரதி எழுதுதல் போட்டி


1 செல்வி. அருணாசலம் பரமேஸ்வரி


2 திரு. ஜெயச்சந்திரன் ஜெயராஜிதன்


3 திருமதி. ரிஸ்வான் சிவரமனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## රත්නායක මුදියන්සේලාගේ ලෙළුම් පාඨලී බණ්ඩාර
## ජ්‍යෙෂ්ඨ අංශය - පද්‍ය රචනා තරගය
## "නොදුටු ස්නේහය "

සිදුහත් ඔබ හදවත
මලෙක මෙලෙක ඇති
කොහොමද ඔබ දරා ගත්තේ
කටුක අපිස් වන
සරයන් කප කෙළ
පැතුවා ඔබ මම
කුල භෝජන අතැර දමා
වනයක තනිවෙන

රතියෙන් මත්ව
වැට කොටු කඩා
සාලවතියක පසුපස
ඇයිද ඔබ නික්මුණේ
ඉපිද මෙ සසර තුළ
ගෙනයනු මොනවාද
කෙළෙස් මල හැර

ඉතිරි කර පා සළඹ
හැර ගියේ මා නොවේ
මගෙන් ලද පේමය
ආහෝ ! කෝවලන්
මිරිගුවකි පෙනී
නැතිවී යන
නොවැටහී ගියාදෝ
කෝමලියගේ යහන මත

නූපන් කුරුලු
පැටියකු කුස
කැදැල්ල විවරයි
තවමත් නුඹහට



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ගල්මන්ගොඩ ගුරුගේ නිලන්ත ප්‍රදීප් කුමාර

## අවු 18 ට වැඩි - පද්‍ය රචනා (සදැස්)

## "අකීකරුකමට දඬුවමක්"

ගම කෙලවරෙහි තුරු වදුලේ කැදැල්ලෙහි
කිරි කැටි බිළිඳු දෙදෙනෙකි මවි තුරුල්ලෙහි
නෙත් දෙක විලස රැකගන්නා ඇසිල්ලෙහි
ගම් දරුවනට ඇසුනා ගී කැදැල්ලෙහි

කවා පොවා සනසා දරුවන් දෙන්නා
පිටතට නොයන්නැයි මව ඔවදන් දුන්නා
අහර සොයන්නට ඈය බැහැරට යන්නා
එබිකම් කර බලා උන් පිටතට එන්නා

සුන්දර ලෝකයේ විසිතුරු බලන්නට
අම්මා ඉඩ නොදෙන්නේ ඇයිදැයි අපට
පැන පැන සෙල්ලම් කෙරුවා අවට
නොදැනුණි උන්ට ගියදුර කෙතරම් ද ගෙට

කිචි බිචි ගගා සුරතල් ලෙස දුව පනිනා
පැටවුන් දෙදෙන කොල්ලන්ගේ ඇස ගැටුනා
බේරෙන්නට මගක් දැන්නම් නැත පෙනුනා
මෙහොතකින් කූඩුවක් තුළ සිර කෙරුනා



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කුසගිනි නිවන්නට දරූ දෙදෙනාගේ
අහරක් රැගෙන මව එයි විදුලිය වාගේ
කෝ දරුවන් දෙදෙන නැත අයියෝ මාගේ
ඇය වැලපුනා නිහඬයි පෙදෙසම වාගේ

ලැබුනත් දිවි බොජුන් මේ සිරගෙය ඇතුලේ
නොවටී තරම් මවගේ උණුසුම තුරුලේ
සිහිවී මවගේ ඔවදන් හද ගිනි ඇවිලේ
දරුවන් දෙදෙන වැලපෙති කුඩුව ඇතුලේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றுபட்டால் (சிறுவர்கதை)

நசீர்! நான் கேட்டதற்கு நீ என்ன முடிவு எடுத்திருக்கிறாய்?

என்னாலை முடியாது வாப்பா. நீங்கள் வெறித்தனம் பிடித்து ஆடுகின்ற சூதாட்டத்திற்கு என்னைப் பகடைக் காயாக்க நினைக்காதீர்கள். கொடூரமான, நியாயமற்ற உங்கள் திட்டத்திற்கு நான் என்றுமே துணை நிற்க மாட்டேன்.

மரீனா! உன்ரை பிள்ளைக்குச் சொல்லி வை நல்லதோ, கெட்டதோ அவன் எங்கள் சொற்படி தான் நடக்க வேண்டும் வாழ வேண்டும். நான் பள்ளிக்குப் போட்டுவாறன். அவனை ஒரு நல்ல முடிவாக எடுக்கச் சொல்லு என்று கூறிவிட்டு முகமெட் வெளியே போகின்றார்.

மரீனாவிற்குத் தன் மகனின் பிடிவாதக்குணம் தெரிந்தும் கணவனின் கட்டளையை மீற முடியாமல் மகனிடம் சென்று கெஞ்சிக் கேட்கின்றாள்.

உம்மா! நீங்கள் இதில் தலையிட வேண்டாம். வாப்பா என்ன செய்யச் சொன்னார் தெரியுமா?

எனக்கு எல்லாம் தெரியும்.

என்ன உம்மா சொல்லுறியள்? தெரிந்துமா இப்படியான கொடிய செயலைச் செய்ய சொல்லுறியள்? நீங்களும் ஒரு தாய்தானே? எப்படி உம்மா? உங்களை நினைக்கவே எனக்கு அருவருப்பாய் இருக்குது. ஒரு வேளை இந்த விபரீத பரீட்சையில் நானும் செத்துவிட்டால் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி உங்களுக்கு இருக்கும் என்று சொன்னால் நான் வாப்பாவின் விருப்பத்தைச் சந்தோஷமாக நிறைவேற்றுகின்றேன்.

ஐயோ! என்னடா நசீர் சாவு அது இது என்று என்னவோ சொல்லி என்னைப் பயமுறுத்துகின்றாய் அப்படி உனக்கு ஏதும் நடந்தால் அடுத்த கணமே உன் உம்மா உயிரை விட்டிடுவாள் தெரியுமா?

பார்த்தியளே? வலிக்குதெல்லே எனக்கு ஏதும் நடந்தால் உங்கள் மனம் துடிக்குதெல்லே? தாங்க முடியாமல் இருக்குமெல்லே? அப்படித்தான் எல்லாத் தாய்மாருக்கும் இருக்கும் என்பதை மறந்திடாதீர்கள் எனக்குப் புத்திமதி சொன்னது காணும் உன்னுடைய முடிவு என்ன அதைச் சொல்லு.

உங்கள் இருவரோடும் கதைப்பதில் எதுவித பிரயோசனமும் இல்லை. அதனால் வாப்பாவின் விருப்பத்தை நிறைவேற்றுகின்றேன். இதுவே தொடக்கமும் முடிவாகவும் இருக்கட்டும் என்று அவரிடம் சொல்லி வையுங்களே என்று கண்டிப்புடன் கூறிவிட்டுச் செல்கின்றான்.

தன்னுடைய ஏற்பாட்டிற்கு மகன் சம்மதித்து விட்டான் என்று சந்தோஷப்பட்ட முகமெட் ஆக வேண்டிய காரியங்களைப் பக்குவமாகச் செய்து முடிக்கின்றார். திட்டமிட்ட படி மகனுக்கு எல்லா விடயங்களையும், வழிவகைகளையும் மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் சொல்லிக் கொடுத்தார். அந்த நாளும் வந்தது. நசீரும் மிகவும் உற்சாகத்துடன் புறப்பட ஆயத்தமானான்.

நசீர்! நீ இதிலை மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் இருக்க வேண்டும். எந்தவித தடுமாற்றமும் இருக்கக் கூடாது. குறிப்பிட்ட நேரத்திற்கு பின் அரைவினாடி தாமதித்தாலும் அது உன் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். பார்த்து நடந்து கொள். காரியம் முடிந்தவுடன் உடனடியாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். சரி 'வெற்றியுடன் திரும்பி வா' என்று ஏதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சாதனை செய்ய மகனை அனுப்புவது போல் வாழ்த்தி அனுப்புகின்றார். ஒரு புன்னகையை மட்டும் தகப்பனுக்கு விடையாகக் கொடுத்து விட்டு வெளியேறுகின்றான்.

சுமார் மூன்று மணிநேரம் கழித்து மகனின் தொலைபேசி அழைப்பு முகமெட்டுக்கு வருகிறது. ஆவலுடன் அதை எடுத்து "என்ன மகனே எல்லாம் நல்ல படியாக முடித்து விட்டாய் தானே? நீ இப்போ எங்கே நிற்கின்றாய்? உடனே வீட்டிற்கு வா. உன்னைக் காணேல்லை என்று உம்மா அழுது கொண்டிருக்கிறாள்"

வாப்பா என்னை மன்னித்து விடுங்கோ நீங்கள் தந்துவிட்ட பொருளைப் பள்ளியிலே வைத்துப் போட்டு மறந்து போய் வந்திட்டன்.

ஐயோ! என்னடா காரியம் செய்து போட்டு நிற்கிறாய்? உன்னை யார் அங்கு போகச் சொன்னது? நீங்கள் தானே சொன்னீர்கள். என்ன நான் சொன்னேனா?

ஆமாம் நீங்கள் தான் எந்த காரியம் செய்யப் போவதாக இருந்தாலும் பள்ளிக்குப் போய் தொழுதிட்டுப் போனால் அது நல்லபடியாக முடியும் என்று அடிக்கடி சொல்வீர்கள் அதுதான் நானும் போனேன்.

அல்லாவே! எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருக்குதே? வாப்பா புலம்பிக் கொண்டு நிற்பதில் எதுவித பயனும் இல்லை நீங்கள் குறிப்பிட்ட நேரமும் நெருங்கிக் கொண்டு வருகுது. தொழுகை நேரம், எல்லோரும் கூடியிருப்பார்கள். உடனடியாய்ப் போய் அதை அகற்றாவிட்டால் எங்களில் எவ்வளவுபேர் அழிந்து போவார்கள் றம்சான் பெருநாள் அதை நினைவில் வைத்துக் கொண்டால் சரி போங்கோ வாப்பா உடனடியாய்ப் போய் எங்கள் மதத்தவரைக் காப்பாற்றுங்கோ.

போகிறேன். இப்பவே போய் அவர்களைக் காப்பாற்றுகின்றேன். எங்கள் மதம் அழியக்கூடாது என்று கூறியபடி கையில் இருந்த தொலைபேசியையும் வீசிவிட்டு மின்னல் வேகத்தில் பள்ளியை நோக்கி ஓடுகின்றார்.

ஆனால் அந்தப் பள்ளியின் முன்னே பெருந்திரளான மாணவர்கள் ஒன்று கூடி நிற்கின்றார்கள். இந்துமதம், கிறிஸ்தவமதம், இஸ்லாமியமதம், பௌத்தமதம் என்று வேறுபாடின்றி வித்தியாசம் தெரியாமல் எவரும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் அனைவரும் கைகோர்த்து நிற்கின்றார்கள். யார் என்ன மதம்? யார் என்ன இனம்? என்று யூகிக்கக் கூட முடியாத நிலையில் ஒரே விதமான பாடசாலை சீருடையில் காணப்பட்டார்கள். ஏராளமான பொதுச் சனங்கள் அங்கே குழுமி நின்றார்கள். காரணம் தெரியாமல் விழித்தார்கள். மாணவர்கள் எவருமே எதுவுமே வாய்திறந்து கூறவில்லை.

"ஏனப்பா எல்லோரும் இப்படிக் கூடிவந்து போராட்டம் செய்கின்றீர்கள்? என்று கூட்டத்தில் இருந்து பல குரல்கள் கேள்வி கேட்ட போதும் மாணவர்கள் எதுவும் பேசவில்லை ஆனால் அங்கு நின்ற சில மாணவர்கள் முன்னே வந்தார்கள் கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் தங்கள் கைகளைத் தாங்களே அறுத்துக் கொண்டார்கள். கூடி நின்றவர்கள் பயத்தால் அலறினர்கள். தத்தம் தெய்வங்களைக் கூப்பிட்டுக் கத்தினார்கள்.

ஆனால் எந்த மதத்தின், இனத்தின் தெய்வங்களோ ஓடி வரவும் இல்லை. காப்பாற்றவும் இல்லை. மாணவர்கள் கைகளில் இருந்து ரத்தம் பெருகிக் கொண்டேயிருந்தது. உதவி செய்ய வந்தவர்களை மற்றைய மாணவர்கள் தடுத்தார்கள். ஏனைய மாணவர்களும் தங்கள் கைகளை வெட்டப் போனார்கள்.

ஏதோ பெரிய விபரீதம் தான் நடக்கப் போகுதென நினைத்து முகமெட் மிகவும் பயந்து போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே வந்து ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்? இப்ப உங்களுக்கு என்ன வேனும் சொல்லுங்கோ என்று கேட்டார்.

அப்படிக் கேளுங்கோ அங்கிள் இதற்கு நாங்கள் பதில் சொல்லுறம். உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? இங்கு நான்கு மத மாணவர்கள் சேர்ந்து நிற்கின்றோம். ஒருவருக்கு ஏதும் என்றால் நாங்கள் ஒன்றாகவே சேர்ந்து கொள்வோம். மதம், இனம் என்று துவேசம் காட்டி பழிவாங்குகின்றீர்களே? இதோ எங்கள் உடம்பில் இருந்து வெளியேறிய ரத்தம் எல்லாம் ஒன்றாகக் கலக்கப்பட்டு இருக்கிறதே. அது யாருடைய ரத்தம் என்று பிரித்து எடுத்துக் தர முடியுமா? அனைவரது ரத்தமும் ஒரே சிவப்பாக இருக்கிறதே அதனை உங்கள் மதத்திற்கு இனத்திற்கு ஏற்றவாறு நிறத்தை மாற்ற முடியுமா? சொல்லுங்கள் இந்தப் பிரிவினைகள், துவேசங்கள் எத்தனை காலமாகத் தொடர்ந்து வருகிறது. மதம் இனம் என்று வெறிபிடித்து அலைகின்றீர்களே இறுதியாக என்ன பயனைப் பெறப் போகின்றீர்கள்? என்ன சுகத்தை அனுபவிக்கப் போகின்றீர்கள்? அனைவரினதும் சந்ததிகள் பெருகுவதைத் தடுக்கின்றீர்கள் அவ்வளவுதான்

எமது நாடு குருதியால் நனைந்தது போதாதா? பெருகிய ரத்த வெள்ளத்திற்கு அணைகட்ட எவருமில்லாமல் தவித்தது, துடித்தது காணாதா? சிறுவர்கள், இளையோர்கள், வயோதிபர்கள் என மடிந்து போனது திருப்தியில்லையா? வேண்டாம் இனி எதுவுமே வேண்டாம். அதையும் மீறி உயிர்கள் அழிந்து! போனால்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என்றால் நாங்களும் தயாராய்த்தான் இருக்கின்றோம்.

காலத்தைத் தாமதிக்காமல் இதோ உங்கள் முன்னே நாங்கள் அழிந்து போகின்றோம் நீங்கள் எல்லோரும் உங்கள் மதத்தை, இனத்தை கட்டி அழுங்கோ என்று ஆவேசமாகக் கத்திய மாணவர்கள் யாரென்று எவருக்குமே தெரியவில்லை.

இல்லை வேண்டாம் உங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம் எல்லாம் மதங்களும் இப்படியே மாறி மாறி அழிந்து போனால் எமது நாடு சுடுகாடாய்த் தான் காட்சியளிக்கும். எங்களுடைய இந்தப் பிரிவினை வாதத்தை விட்டு விடுகின்றோம். ஆவேசங்காட்டுவதை நிப்பாட்டுகின்றோம். இனி மேல் எமது நாட்டில் இனத்துவேசம், மதத்துவேசம் என்ற சொல்லுக்கே இடமளிக்க மாட்டோம். நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம், சமூகம், ஒரே நாட்டவர் என்ற நினைப்பில் வாழுவோம் என்று அங்கு கூடுகின்ற அனைவரும் கைகளை உயர்த்தி பலத்த சத்தத்துடன் சத்தியப்பிரமாணம் செய்வது போல் கூறினார்கள்.

மாணவர்கள் மிகவும் சந்தோஷமாகவும், உற்சாகத்துடனும் கரகோஷம் செய்தார்கள். காயமுற்ற மாணவர்கள் யாவரையும் எந்த மதம் என்று பாராது அணைத்துத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலையை நோக்கி ஓடினார்கள். எந்த மதம் எந்த மத மாணவனுக்கு ரத்தம் கொடுத்து காப்பாற்றப் போகின்றார்களோ தெரியவில்லை.

வழமைப் போல் தாங்கள் பயமின்றி சுதந்திரமாக நடமாடலாம் என்ற பெரிய நம்பிக்கையுடன் அங்கு குழுமிகின்ற சனங்கள் ஒவ்வொருவராக கலைந்து வெவ்வேறு திசைகளில் செல்கின்றார்கள். ஆனால் நான்கு மதத்து மாணவர்களின் உடலில் இருந்து சிந்திய இரத்தம் ஒன்றாகக் கலந்து அங்கே உறைந்து கிடக்கின்றது.

அந்த இரத்தத்தில் ஒன்று தன் செல்வ மகனுக்குச் சொந்தமானது என நினைத்து முகமெட் பெருமை அடைகின்றார்.

(மாணவர்களின் தியாகம் - நாட்டில் நல்ல மாற்றத்தை கொண்டு வரும்)

**ஆக்கம்: செல்வி. பரமேஸ்வரி அருணாசலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போற்றுவோம்! நினைவு கூருவோம்!

## அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன்



**கலைக்காகவே வாழ்ந்த சாதனையாளனை!**

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் திருகோணமலை மாவட்டமே இருள் சூழ்ந்த கரிநாள். எல்லோர் மனதையும் இரும்புச் சங்கிலியைப் போட்டு இழுத்தாற் போல் கண்களில் பெருக்கெடுத்தோடிய கண்ணீருடன் ஆழ்ந்த துக்கத்தினை வருடிய அதிர்ச்சி செய்தி ஒலித்த நாள் 30.07.2019

**அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் அவர்களின் இறப்புச் செய்தியைக் கேட்ட தாக்கமே அவை.**

திருகோணமலை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நாளை உலகளவில் கலைத்துறையில் தான் வாழும் பிரதேசத்தின் சார்பாக சாதனைகளைப் புரிய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளினை மட்டும் தனது எண்ணக் கருவாகக் கொண்டு 2004ஆம் ஆண்டு சிறுவர் சித்திரக் கலைக் கூடத்தை அமைத்து சிறுவர் இலக்கியத்தில் கதை, நாவல், நாடகம், சித்திரம் என ஈடுபட்டு நேற்றுவரை அயராது உழைத்து இன்று ஓவியமாகிவிட்ட ஆசிரியர், ஓவியர் அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் கலைஞர் அவர்களின் சாதனை கலைப் பயணத்தை எமது பட்டினமும் சூழலும் பிரதேச கலாசார அதிகார சபையினால் வெளியிடப்படும் "தாளம்" மலர் மூலமாக போற்றி நினைவு கூறுவதனை தார்மீகக் கடமையாகவே கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன்**

**(06.10.1960 – 30.07.2019)**

ஓவியம் போற்றிய ஓவியனின் சாதனைப் பயணம்.

**ஓவியக்கலை என்பது வரைதல், கூட்டமைத்தல் மற்றும் பிற அழகியல் சார்ந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கி ஊடகங்களில் நிறப்பூச்சுக்களைப் பயன்படுத்தி வரைபவரின் வெளிப்பாட்டு மற்றும் கருத்தியல் நோக்கங்களை வெளிக்கொணரும் இக் கலையானது பல்வேறு ஆக்கத்திறன்களை உள்வாங்குவதற்கும், ஆவணப்படுத்துவதற்கும், வெளிப்படுத்துவதற்குமான ஒரு வழிமுறையாகும். அவ்வகையில், இவ்வோவியக் கலையில் திருகோணமலை மண்ணில் புகழ் பூத்து விளங்கியவரும், தனது ஓவியக் கலைப் படைப்புக்கள் மூலம் பார்ப்பவர்களை ஈர்த்து தனக்கென்று தனித்தன்மைக் கொண்டவரும், அறிவு, திறமை, முயற்சி என்ற அடிப்படையில் சாதனைகளை முன்னெடுத்துச் சென்றவருமான அமரர். அருளானந்தம் அருள்பாஸ்கரன் அவர்களின் சாதனைப் பயணம் பற்றிய தொகுப்புக் கட்டுரை.**

இவர் கொழும்பு மாவட்டத்தில் சண்முகம் அருளானந்தம் என்பவருக்கும், மேரிலூர்த்து என்பவருக்கும் 06.10.1960ஆம் ஆண்டு பிறந்த இவர் ஆலங்கேணி மற்றும் உவர்மலையை வசிப்பிடமாகக் கொண்டவர். இவரது கலைப் பிரவேசமானது 4-6 வயதிலேயே (1964-1966) ஆரம்பமாகி விட்டது. அவரது தந்தை சண்முகம் அருளானந்தம் கடற்கரை மண்ணில் மண் மேடையில் வரைதல், ஆமை வீடு கோட்டை போன்ற மணச் சிற்பங்களை செய்து காட்டினார். அந்த நிகழ்வே அருள்பாஸ்கரன் அவர்களின் ஓவியக் கலையின் படைப்பாற்றலுக்கு அடிக்கல்லாக வித்திட்டது. அன்று அவர் வரைந்த சித்திரத்திலிருந்தே கலையின் சிந்தனையும், திறமையும் வளர வழிகோலியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவர் தனது ஆரம்பக் கல்வியினை தற்போதைய கொழும்பு விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் பயின்றார். தரம் 1,2 இல் அவருடைய வகுப்பாசிரியர்களிடம் வரைதல், ஆக்க வேலைப்பாடுகள் பற்றி கற்க ஆரம்பித்த வேளையில் சிறந்த படைப்புகளுக்கு அனைவராலும் பாராட்டுக்களைப் பெற்றார். திரு.சின்னத்தம்பி ஐயா அவர்களிடம் வண்ணங்களை பொறுத்தமாக பாவிக்கும் நுட்பத்தையும், திரு.வரதராஜனிடம் மனித மெய்நிலைகள் பற்றியும், தூரிகை பாவனை, கை அசைவு பிடித்தல், சுயாதீன அசைவு, வர்ணக் கலப்பு போன்றவற்றை கற்றுக் கொண்டார். அத்துடன் அவருக்கு கிடைக்கப் பெறுகின்ற எந்தப் பொருளையும் புத்தாக்கத்திற்காக பயன்படுத்திக் கொள்ள சிறுவயதில் அனுபவத்தையும் அதற்கான பயிற்சியையும் அவரின் தன்னார்வத்தினால் ஏற்படுத்திய பின்னர் கலையுலகத்திற்குள் பிரவேசிக்க ஆயத்தமானார்.

தொடர்ந்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சையை மட்டகளப்பு வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலயத்தில் எழுதிய பின்னர் உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவை தி/இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் முடித்து Diploma In Agriculture க்குரிய பரீட்சையில் சித்தி பெற்று அப் பட்டப் படிப்பை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் முடித்தார். பின் ஆசிரியப் பயிற்சிக்காக கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருக்கும் போது மாற்கு ஓவியரின் அறிமுகம் கிடைத்து அவரிடம் சித்திரக்கலை பற்றி கற்றுக் கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சியில் இருக்கும் போது க.இராசரத்தினம் அவர்களிடம் பிரதிமை ஓவியங்கள் பற்றிக் கற்றுக் கொண்டதோடு, சிவசுப்பிரமணியம் அவரிடம் தனது கலைக்கான அறிவையும் பெற்றுக் கொண்டார்.

1985ஆம் ஆண்டு டிப்ளோமா தராதரப்பத்திரம் பெற்று கொழும்பு மாவட்டத்தில் ஆசிரிய நியமனத்தைப் பெற்று அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் விருப்பமான சித்திரக்கலை பற்றி தேடி சுயமாக கற்ற அவர் சித்திரப்பாடத்தில் நியமனம் பெற வேண்டும் என்பதற்காக 1990-1992 வரை Diploma In Fine Arts I Vibhavi Acadamy Of Fine Arts இல் பூர்த்தி செய்தார். 1999 இல் தி/இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு சேவை மாற்றம் பெற்று வந்தார். பின் 2018இன் இறுதிப்பகுதியில் தி/புனித சூசையப்பர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.

